# இராணுவசிப்பாய்கள்-பொதுமக்கள் மோதல்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 175
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 20 ஜமா. ஆகிர் 2 புதன்கிழமை [5-8-70]

**ஈழநாடு சந்தா**

தினப்பதிப்பு வாரப்பதிப்பு

3 மாதம் ரூ. 18-00 ரூ. 4-00

6 மாதம் ரூ. 34-00 ரூ. 7-50

வருடம் ரூ. 65-00 ரூ. 14-00

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

## ஒருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், புதன்

கடலில் மீன்பிடிக்கச்சென்ற மீனவர் சிலரை ராணுவ சிப்பாய்கள் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் மயிலிட்டியில் நடைபெற்றுள்ளது நேற்றுமாலை நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டார்

நேற்று முன்தினமிரவு 7-45 மணியளவில் மதுபோதையில் வீதி வழியே கோஷமிட்டுக் கொண்டு வந்த ஐவர்கொண்ட இராணுவ கோஷ்டியொன்று அவ்வழியே வந்துகொண்டிருந்த வயோதிபரொருவரையும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்களையும் தக்கிவிட்டு தாவளைச் சந்திக்கருகாமையிலுள்ள கள்ளு விற்கும் இடமொன்றுக்குச் சென்று கள்ளுக்கேட்டதாகவும் கள்ளு இல்லையென்று கூறவே அங்குவீட்டிலிருந்தவர்களை தாக்கியதாகவும் இதைத்தொடர்ந்து ராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையே பலத்த கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது இது சம்பந்தமாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது, வீட்டிலிருந்த பெண்களோடு தகாதமுறையில் ராணுவத்தினர் நடந்துகொள்ள. முயன்றதாகவும் பொலிஸ் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை தொடர்ந்துநேற்றுப்பிற்பகல் 2மணியளவில் கடலில் மீன்பிடிக்க படகுகளில் சென்றிருந்த மீனவர் சிலரை இராணுவத்தினர் கடலில் வைத்து தாக்கியதாகவும், இதில் ஒருவர் காயமடைந்து காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன்.

கோப்பாய் எம். பி. திரு ஸி. கரவேற்பிள்ளை, வழக்கறிஞர் குமரகுரு, செனட்டர் நடராசா ஆகியோர் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று இராணுவ அதிகாரிகளுடனும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு ஜோக்முடனும் பேச்சுவார்த்தை நடத்தினர். இராணுவ முகாம் கொமாண்டர் திரு பாலா பிரான்சிஸ் இராணுவ வீரர்களை கண்டபடி வெளியே போகாமலும், இப்படியான சம்பவங்கள்இடம் பெறுமாலும் அவதானித்துக் கொள்வதாக உறுதியளித்தார்.

இதுசம்பந்தமாக நால்வர் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளனர். வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு ஆர் சுந்தரலிங்கத்திற்கும், வட மாகாண அரசாங்க அதிபருக்கும் இச் சம்பவம்பற்றி கோப்பாய் எம், பி. அறிவித்துள்ளார். விசாரணை தொடர்கிறது.

## வாலிபர் கோஷ்டியின் அட்டகாசம்

# யாழ். ரயில் நிலையத்துக்கு வெளியே நடந்த பயங்கரம்!

## இருப்புக்கம்பி தாக்குதல்; மூவருக்குப்படுகாயம்

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு வெளியில், வாலிபர்கோஷ்டியொன்று பிரயாணிகள்மீது நேற்றுநடத்திய பயங்கரதாக்குதலில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்தனர். மற்றும் பலர் சிறுகாயங்களடைந்தனர். சுமார் அரை மணிநேரம்வரை இத்தாக்குதல் நடந்ததாகவும் வாலிபர் கோஷ்டியினர் இரும்புக் கம்பிகளைப் பே[illegible]ரினுல் மறைத்துவைத்திருந்து தாக்கினர் களென்றும் பொலிஸ் விசாரணையில் கூறப்பட்டது.**

இலங்கை வங்கியின் யாழ் கிளை உயர் அதிகாரியான மாவிட்டபுரத்தை சேர்ந்த நவரத்தினம் வருமானவரிக் கந்தோர் ஊழியரான மாவிட் [illegible]

மாணவர்களும் அரசாங்க ஊழியர்களும் புகையிரத நிலையத்திலிருந்து வெளியில் வந்தபோது இத்தாக்குதல் நடந்ததாக விசாரணையில் [illegible]

கடைகளிலும் வீடுகளிலும் தஞ்சம் அடைந்தார்கள் என்று கூறப்படுகிறது பிரயாணிகள் சென்றபின்னரும் கூட அவ் வாலிபர் [illegible]

## மாங்குளம் முக்கொலை வழக்கு

### "முதலாம் எதிரியுடன் நான் கதைக்கவில்லை"

### சிறைக்காவலாளர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

முதலாம் எதிரியுடன் நான் கதைக்கவில்லை. அவரை நான் அடிக்கவில்லை. வாக்குமூலம் அளிக்கும்படி சொல்லவில்லை. அவரை பயறுத்தவில்லை.

மாங்குளம் முக்கொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த சிறைச்சாலைக் காவலாளர் கந்தையா பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

[illegible] செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பாலசிங்கம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

வவுனியா பதில் மாஜிஸ்டிரேட் முன் ஜூலை 12-ந் திகதி 1-ம் எதிரியை ஆஜர் செய்தேன். காலை 10 மணி முதல் 4 மணி வரை எதிரியை கோர்ட்டிலுள்ள ஒரு அறையில் வைத்திருந்தேன். அந்த அறையில் வேறு எவ [illegible]

## காங்கேசன்துறைக்கு நவீன தபால் நிலையம்

### பட்டினசபை தலைவர் முயற்சிபலனளித்தது

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன் துறையில் நவீன வசதிகளைக் கொண்ட தபால் நிலையம் விரைவில் உருவாகும் பத்து வருடங்களுக்கு முன் தபால் நிலையம் நிறுவுவதற்கு ஒதுக்கப்பட்ட காணியில் இத்தபால் நிலையம் கட்டப்படும் முன்னர் இத்தபால் நிலையத்துக்கு மான்யம் ஒதுக்கப்பட்டிருந்தது.

சமீபத்தில்மக்கள் அரசாங்கத்தின் தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் வீடமைப்பு அமைச்சர் திரு.பீட்டர் கெனமன் தபால் மாஅதிகாரி திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோர் வடபகுதிக்கு விஜயம் செய்தபோது காங்கேசன்துறை பட்டின சபைத்தலைவர் திரு. க ஜெயபாலசிங்கம் அமைச்சரையும் தபால்மா அதிகாரியையும் சந்தித்து காங்கேசன்துறை புதிய தபால் நிலையம் நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினுர்.

நவீன முறையிலான தபால்நிலையம் நிறுவப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவரிடம் அவர்கள் உறுதி தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து புதிய தபால்நிலையம் நிறுவுவதற்கு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது இவ் வருட முடிவுக்குள் தபால் நிலையத்துக்கான அத்திபாரக்கல் நாட்டப்படும்.

## சமரக்கொடி வருகிருர்

மாவிட்டபுரம், செவ்வாய்

புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் முக்கிய பிரமுகரும், ஐக்கிய ஸ்தலஸ்தாபன சம்மேளக்காரிய தரிசியுமான திரு எட்மன்ட் சமரக்கொடி இம்மாதம் 8ம் திகதி வட பகுதிக்கு விஜயம் செய்ய இருக்கிருர்.

இவர் முதலில் சுன்ஞகம் பட்டினசபை ஊழியர்களின் பிரச்னைகள் குறித்து பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவார். சுன்ஞகம் ப. ச. ஊழியர்களின் 10 கோரிக்கைகள் இப் பேச்சுவார்த்தையின் போது பிரஸ்தாபிக்கப்படவுள்ளன.

6 மாதகால வேலை பயின்ற ஊழியர்களை நிரந்தரமாக்குவது, சம்பள உயர்வு, சந்தை வரி வசூலிப்பவரை நிரந்தரமாக்குவது முதலியன இக் கோரிக்கையில் அடங்கும்

## சுருட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்குளம் முக்கொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த சிறைச்சாலைக் காவலாளர் கந்தையா பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் எட்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மாங்குளத்தில் 68-ம் ஆண்டு ஜூலை 2-ந் திகதி வில்லியம், பியரத்ன ஆகியோர் செல்லத்துரை, சின்னையா, பால்ராஜ் ஆகியோரை கொலை செய்ததாக... திகதி 1-ம் எதிரியை ஆஜர் செய்தேன். காலை 10 மணி முதல் 4 மணி வரை எதிரியை கோர்ட்டிலுள்ள ஒரு அறையில் வைத்திருந்தேன். அந்த அறையில் வேறு எவரும் இல்லை. நானும் எதிரியும் மட்டும் தான் இருந்தோம். 2-ம் எதிரி வேறு ஒருவரின் பாதுகாப்பில் இருந்தார், எங்கு இருந்தார் என்று எனக்குத் தெரியாது. அந்த அறைக்கு வேறு யாரும் வரவில்லை. ஒருதரும் கதைக்கவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இலங்கை வங்கியின் யாழ் கிளை உயர் அதிகாரியான மாவிட்டபுரத்தை சேர்ந்த நவரத்தினம் வருமானவரிக் கந்தோர் ஊழியரான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்வவிநாயகம்ஆகிய இருவரும் உடனடியாக யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்ப்பட்டனர். நவரத்தினத்தின் மண்டையில் பலத்த காயமேற்பட்டுள்ளது செல்வநாயகத்தின் நெற்றியிலும் காலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. யாழ்ப்பாணம் பிஸ்கால் ஊழியரான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்லத்துரையின் மண்டையிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் கோஷ்டியொன்று உடனடியாகப் புகையிரத நிலைய பகுதிக்கு செல்வதற்கு முன்னர் தாக்குதல் நடத்திய வாலிபர் கோஷ்டியினர் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டனர் அப்பகுதியில் பொலிஸார் தொடர்ந்து காவல்செய்து வருகின்றனர் இது ஒரு திட்டமிடப்பட்ட தாக்குதல் என பொலிசார் கருதுகின்றனர்.

காங்கேசன் துறையிலிருந்து வந்த புகைவண்டி காலை 8-25 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைந்ததும். மாணவர்களும் அரசாங்க ஊழியர்களும புகையிரத நிலயத்திலிருந்து வெளியில் வந்தபோது இத்தாக்குதல் நடந்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

18 வயதிற்கும், 25 வயதிற்கும் உட்பட்ட வாலிபர் கோஷ்டியினர் பிரயாணிகளிடம் 'ஐயா நீங்கள் மாவிட்டபுரமா?' என்று கேட்டு இரும்புக் கம்பியால் தாக்கினார்கள் என்றும் அவர்கள் வேட்டியும் சாரமும் அணிந்திருந்தார்களென்றும் கூறப்படுகிறது

சுமயர் அரைமணி நேரம் அந்த வாலிப கோஷ்டியினர் புகையிரத நிலயத்திற்கு முன்னால் ஆட்சிநடத்தினார்களென்றும் அரசாங்க ஊழியரும், மாணவர்களும், மாணவிகளும் நாலாபக்கங்களிலும் சிதறி ஓடினார்களென்றும் சிலர் தேநீர்க் கடைகளிலும் வீடுகளிலும் தஞ்சம் அடைந்தார்கள் என்றும் கூறப்படுகிறது

பிரயாணிகள் சென்றபின்னரும் கூட அவ்வாலிபர் கோஷடியினர்சுமார் 10 நிமிடங்கள், அவ்விடத்தில்நின்று கோஷங்கள் எழுப்பினார்கள் என்றும் பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

பிஸ்கால் ஊழியரான செல்லத்துரை மண்டையில் காயத்துடன் நேராக பிஸ்கால் காரியாலயத்திற்கு வந்துசேர்ந்தார். உடனடியாக அவர் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பொலிசார் இச்சம்பவம் பற்றி தீவிர விசாரணை செய்துவருகின்றனர். வாலிபர் கோஷ்டியினர் இரண்டொரு தினங்களில் சிக்குவார்கள் எனப்பொலிசார் நம்பிக்கை தெரிவித்தனர்.

...வேர்ண்ண அபயசேகரா ஆகியோர் வடபகுதிக்கு விஜயம் செய்தபோது காங்கேசன்துறை பட்டின... வதற்கு ... லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது இவ் வருட முடிவுக்குள் தபால் நிலையத்துக்கான அத்திபாரக்கல் நாட்டப்படும்.

...வரி வசூலிப்பவரை நிரந்தரமாக்குவது முதலியன இக்கோரிக்கையில் அடங்கும்

— —

# வேலையில்லாத பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்

## அரசாங்க எம். பி.க்கள் வற்புறுத்து

கோட்டை, செவ்வாய்

மக்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இருமாத காலமாகியும், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை யென்று அரசாங்க ஆட்சிமன்ற குழுக் கூட்டத்தில் பல எம். பிக்கள் சுட்டிக்காட்டினர்

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நேற்று கடந்த அரசாங்க ஆட்சிமன்றக் குழுக்கூட்டத்தில் தமது தொகுதியிலுள்ளவர்கள் இப் பிரச்னையைத்தீர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுத்தது என்பது குறித்து அறியவிரும்புகிறார்களென்றும் எம் பிக்கள் தெரிவித்தனர்

மந்திரிசபை உபகுழு இப் பிரச்னை சம்பந்தப்பட்ட திட்டங்களை ஆராய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. மந்திரிசபை உபகுழு வேலையில்லாப் பிரச்னை சம்பந்தமாக விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் படுமென்றும், உறுதியான நடவடிக்கைசட் எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

# 'காடைத்தனத்தை ஒழிக்க உதவுங்கள்!'

## பொதுமக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

'பட்டப்பகலில், வாலிபர் கோஷ்டியொன்று சாதாரண பொதுமக்கள் மீது பயங்கர தாக்குதல் நடத்தியிருக்கிறது இப்படியான சம்பவங்களை அனுமதிக்க மாட்டோம். குற்றவாளிகளை கண்டுபிடிக்க பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'.

யாழ்ப்பாணப் புகையிரத பகுதியில் நடந்த தாக்குதல் பற்றி உயர்தர பொலிஸ் அதிகாரியொருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறிதாவது: மாவிட்டபுரத்தில் நடந்த தாக்குதல் சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு, மற்றும் இடங்களில், சாதாரமக்கள் மீது எவரும் தாக்குதல் நடத்துவதை அனுமதியோம்.

பயங்கர ஆயுதங்களைவைத்திருக்கும் வாலிபர்கள் உடனடியாக கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்படுவார்கள். இவர்களை பிணையில் விடுவதற்கு கூட அனுமதிக்க மாட்டேம்.

ஒன்றும் அறியாத. மாணவர்கள் அரசாங்க ஊழியர்கள்மீது தாக்குதல் நடந்துள்ளது. காடைத்தனத்திற்கும் சண்டித்தனத்திற்கும் இடமளிக்க மாட்டோம்.

இச்சம்பவம் பற்றி பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர் பொதுமக்கள் ஒத்துழைப்பு கொடுத்தால்தான் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியும்.

# 'லேக்ஹவுஸ்' பற்றி ஆராய றேயல் கமிஷன் நியமனம்

கொழும்பு, செவ்

'லேக்ஹவுஸ்' நிறுவனத்தின் செலவாணி மற்றும் விடயங்கள் பற்றி ஆராய்வதற்கு மூன்று பேர்கொண்ட றேயல் கமிஷன் ஒன்றை மகாதேசாதிபதி திரு வில்லியம் கோபல்லாவ இன்று நியமித்தார். பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் சிபார்சின் பேரில் மகாதேசாதிபதி இந்தக் கமிஷனை நியமித்தார்

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும், பன்னாட்டு யூரிகள் கமிட்டியின் தலைவருமான திரு. ரி. எஸ். பெர்னாண்டோ தலைவராக நியமிக்கப்பட்டார். மாவட்ட நீதியரசர் டி ஜே விமலரத்தின, வழக்கறிஞர் வால்டர் விமலச்சந்திரா ஆகியோர் மற்ற இரு உறுப்பினருமாவர். (சி. பி, ஏ)

— —

# அன்னாசிப்பழம் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி

கோட்டை, செவ்

இலங்கை அன்னாசி பழங்களை சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது. ஏற்கனவே செய்யப்பட்ட இவ் ஒப்பந்தத்தின்படி இன்று 2000 பெட்டிகளைக் கொண்ட அன்னாசிப் பழங்களும், அன்னாசிப்பழரசமும் ரஷ்யாவுக்கு கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

அன்னாசிப்பழ ஏற்றுமதி மூலம் 17 ஸ்ரேலின் பவுண் பெறுமதியான பணத்தை இலங்கையரசு அந்நியசெலாவணியாக சம்பாதிக்கும்.

— —

# சுருட்டுக் கூட்டுத்தாபன பிரேரணை

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று நடைபெறவிருக்கிறது, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் திரு ஆ. துரைராசசிங்கம் தலைமையில் இன்று மாலை நடைபெறும்

இலங்கைச் சுருட்டுக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் அமைக்கப்படவேண்டுமென அரசினரைக் கோரும் பிரேரணை பற்றியும் கூட்டத்தில் ஆராயப்படும்.

# கண்டியில் விசர்நாய் அதிகம்

கோட்டை, செவ்

மத்திய மாகாணத்தில் விசர்நாய்க்கடி சம்பவங்கள் அதிகரித்துவருவதாக அரசாங்க புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது. இதனைத் தொடர்ந்து விசர்நாய்களுக்கு தடுப்பு ஊசிமருந்து ஏற்றும் நடவக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

கண்டியில் 7ந் திகதிமுதல் விசர்நாய் தடுப்பு ஊசி ஏற்றப்படும்.

— —

# நெடுந்தீவில் தண்ணீர்ப்பஞ்சம்

நெடுந்தீவு செவ்

கடும் வரட்சி காரணமாக நெடுந்தீவு நன்னீர்க் கிணறுகள் பல வற்றியுள்ளமையால் குழாய்மூலம் விநியோகிக்கப்படும்குடி நீர்விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கிராம சபையின் நிர்வாகத்தில் குடிநீர்க் குழாய்கள் காலை மாலை ஆகிய இரு வேளையும் இவ்விரண்டு மணித்தியாலங்கள் திறந்திருந்தன. கிணறுகளில் தண்ணீர் வற்றியமையால் தற்போது காலையில் மட்டும் இரண்டு மணித்தியாலங்கள் குடிநீர் குழாய்கள் திறக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. வருடாவருடம் வரட்சிக்காலத்தில் குடிநீர் குழாய்கள் அமைக்கப்படாத வட்டாரங்களில் இனமாக குடிநீர் விநியோகிப்பது வழக்கமாகும் இவ்வாண்டில் இதுவரை குடிநீர் விநியோகத்தை அரசாங்கம் ஆரம்பிக்காமையால் மக்கள் பெரும் கஷ்டமடைகிறார்கள்.

— —

# நாட்டு மக்களுக்கு அரசாங்கம் நன்றி

கொழும்பு, செவ்வாய்

தனிநபர்பிரேரணைமீதான விவாதம் இன்றுஆட்சி மன்றத்தில்நடைபெற்றது. மக்கள் அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவந்து முதலாளித்துவத்தை தகர்க்கவும் சோஷலிசத்தைவெற்றி பெறச் செய்யவும் காரணமாகவிருந்த மக்களுக்கு சபை நன்றி தெரிவிக்கிறது என்று கோரும் பிரேரணையை திரு பிரின்ஸ் குணசேகரா எம், பி கொண்டு வந்தார்.

உதவி வர்த்தக அமைச்சர் திரு ரத்னாயக்கஇதற்குப் பதிலளித்துப் பேசுகையில் கடந்த அரசாங்க காலத்தில் சிலபொலிஸ் நிலையங்கள் யூ என். பி. கிளைகளாக இயங்கி வந்ததாக குற்றஞ்சாட்டினார், வானொலி பத்திரிகைகள்கூட யூ என் பிக்கு ஆதரவாக இயங்கி வந்தன, ஆயினும் நாட்டு மக்கள் முதலாளித்துவத்தை அமைதியான புரட்சிமூலம் வெற்றிபெறச் செய்துவிட்டனர் தொடர்ந்தும் அரசாங்கத்தைப் பாதுகாக்க உழைத்து வருகிறார்கள் என்றார், நிந்தவூர் எம்பி ஜனாப் முஸ்தபாவும பிரேரணை ஒன்றைக்கொண்டுவந்தார், ஆசிரியர்களை முன்யோசனையின்றி இடமாற்றம் செய்வதை நிறுத்தவேண்டுமென்றும் கடந்த பொதுத்தேர்தலின்பின் பொலிசாரின் உதவியுடன் நடைபெற்ற அசம்பாவிதம் பற்றி விசாரணை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சபை நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றது,

# சண்டிலிப்பாயில் சாக்கு தொழிற்சாலை

மாவிட்டபுரம், செவ்.

சண்டிலிப்பாயில் சாக்குத் தொழிற்சாலையொன்று நிறுவப்படவிருக்கிறது. இதற்காகப் பெறப்பட்ட 75 ஏக்கர் நிலத்தில் தற்போது வேலைகள் ஆரம்பமாகியுள்ளன, பல ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கியதும் வடபகுதியின் சாக்குத் தட்டுப்பாடு நீங்குமென்றும் பல இளைஞர்களுக்குத் தொழில்வாய்ப்பேற்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது,

# ஊரைக் கேட்டுத்தான் தாக்கினார்களாம்

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரத்தில் உள்ள எல்லாரும்ஆலயப்பிரவேசத்திற்கு எதிரானவர்கள் என்று கருதமுடியாது பலர் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவளித்துள்ளனர். இப்படியான சம்பவங்கள் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவானவர்களின் கூடமனம் மாறச்செய்துவிடும்''.

புகையிரத நிலையத்தில் தாக்குதல் சம்பவத்தை நேரில் கண்ட ஓர் அரசாங்க ஊழியர் மேற்கண்டவாறு நமது நிருபரிடம் கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:-ஊரைக்கேட்டுத்தான் தாக்குதல் நடாத்தினார்கள் மாவிட்டபுரம் என்று சொன்னவர்களுக்குத் தான் அடிவிழுந்தது கொக்குவில் கோண்டாவில் பிரயாணிகளுக்கு அடி விழவில்லை தாக்குதல் நடத்திய பின்னரும் கூட சுமார் 10 நிமிடம் வரை தனிக்காட்டு ராஜாக்கள் போல் அவ்விடத்தில் நின்றார்கள.

அந்நேரத்தில் புகையிரத நிலயத்தில் பொலிஸார் எவரும் காணப்படவில்லை பஸ் நிலையம் புகையிரத நிலையம் ஆகிய வற்றில் பொலிஸார் கடமையாற்ற வேண்டியது அவசியம்,

— —

# 2வது பரிசு

நேற்று 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த தேசிய சுவீப்முடிவுகளில் 2வது பரிசு பெறும் டிக்கெட்டின் இலக்கம் 13 G 0828 என்றிருக்க வேண்டும்.

# சாரதி கைது

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் தேர்ஒன்றுக்கு தீவைக்கப்பட்ட சம்பவத்தையொட்டி மட்டுவிலைச்சேர்ந்த கார்ஒன்றை பொலிஸார் கைப்பற்றியதோடு கார் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தலைவரை பொலிஸார் கடந்த 5 தினங்களாக தேடிவருகின்றனர்.

மேலும் சில சாட்சியங்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது சம்பந்தமாப் பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துவருகின்றனர். ஏற்கனவே மூன்று பேர் சாட்சியமளித்துள்ளனர்.

# உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

சண்டிருப்பாய் அங்கணம்மைக்கடவை மீனாட்சியம்மை கோவில் வருடாந்த விழாக்கள் இம்மாதம் ஆறும் திகதி நடைபெற இருக்கும் தொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாக விருக்கின்றன 15-ம்திகதி ரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்த விழாவும் நடைபெறும்.

— —

# இன்று

## ஸ்ரீ ஆண்டாள் விழா

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில்ல் இன்று முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை ஸ்ரீ ஆண்டாள் பூர்வகர்மா விழா சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

0 0 0

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தீர்த்தத் திருவிழாவான இன்றுபகல் பத்து மணிக்கு தீர்த்தோற்சவமும் இரவு இன்னிசைக்கச்சேரியும் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பிணைப்பணம் கட்டக்கூடிய பணப் பொறுப்பாளர் ஒருவரும், இரண்டு விற்பனைப் பிரதிநிதிகளும் உடன் நேரில் வரவும். மனேஜர், ஆர். டி. என். ஸ்ரோர்ஸ் அன் சேல்ஸ் ஏஜென்சி, மேல் மாடி, No 3/1, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 3035

### கல்வி

29-8-70ல் ஆரம்பமாகவிருக்கும் மோட்டார் டிராக்டர் டீசல் முழுநேரப் பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். அதிபர், ஸ்ரீராஜ் ஒட்டோமொபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொமசாக் மாளிகை, மேல் மாடி, 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3034

### விற்பனைக்கு

கோழிகள்:

மலிவு விலையில் முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு. முட்டையிடும் இள லெக்கோன் ஒன்று ரூபா 8/-. முட்டையிடும் இளம் நிறக் கோழிகள் ஒன்று ரூபா 9/-. ராமச்சந்திரன், 204, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3036

உடுவில் சங்குவேலி, சந்தரோடை ரோட்டுக்கு அருகாமையில் உள்ள 6 பரப்புக் கொண்ட குடியிருப்புச் சற்சதுரகாணி உளது. வாங்க விரும்புவோர் கீழ்க் கண்ட விலாசத்துக்கு வந்து காணவும். என். குமாரசுந்தரம், 46/4, 1-ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3038

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ் - ஜெயந்தி நடித்த

**இரு கோடுகள்**

**வெஸ்லி** மானிப்பாய் 2வது வாரம்

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி

சத்தியன், ஷீலா, மது நடித்த

**செம்மீன்**

(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

என். எஸ். கிருஷ்ணன் ரி. ஏ. மதுரம் - டெய்ஸி ராணி நடித்த

**67-ல் என்.எஸ். கிருஷ்ணன்**

(எஸ், ரி. ஆர். பிலிம்ஸ்)

அமரர் அண்ணு, தமிழக முதலமைச்சர் மு. கருணநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

**வின்ஸர்** யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ குமாரி ராஜம் புவனேந்திரம்

★ லடீஸ் வீரமணி

★ அடங்காபிடாரி புகழ் நடராசா


## முல்லைத்தீவு பட்டண சபை
## கேள்வி விளம்பரம்

முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவரால் 1970-ம் ஆண்டு ஆவணி மாதம் 19-ந் திகதி காலை 10-00 மணி வரை பின்வரும் வேலைக்கு சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் 18-8-70 ம் திகதி காலை 10-00 மணி வரை பட்டணசபைக் காரியாலயத்தினில் விநியோகிக்கப்படும்.

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திரப் பணம் | கட்டுப்பணம் |
|---|---|---|
| 1. வெளிச்சவீட்டுவீதிக்கு கல்பதித்து தார்ஊற்றுதல் | 5-00 | 50-00 |

மேலதிக விபரங்கள் தேவைப்படின் இப் பட்டின சபைக் காரியாலயத்தினில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டறிந்து கொள்ளலாம்.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டணசபை, முல்லைத்தீவு.

பட்டணசபை அலுவலகம்,
முல்லைத்தீவு, 28-7-70.

2391

## லொறி விற்பனை

புலோலி ப.நோ.கூ. சங்க சமாசத்தில் 22-8-70-ம் திகதி மு. ப. 10 மணிக்கு 24 ஸ்ரீ 1177 இசுசு (Isuzu) லொறி பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தலைவர்,
புலோலி ப.நோ.கூ. சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

2392

### கல்வி

உத்தியோகத்தர்களுக்கும், சிங்களம் கற்பதில் ஆர்வமுள்ள மாணவருக்கும் யாழ்ப்பாணத்தில் வீடுகளுக்குச் சென்று ரியூஷன் சொல்லித் தரப்படும். ரியூஷன் சொல்லித் தருவதில் நிரம்பிய அனுபவம் உண்டு விரும்புபவர்கள் விண்ணப்பிக்க. விளம்பர இல: 3037, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 3037

வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகத்தாரின் புதிய பதிப்பு வெளி வந்துவிட்டது. க. பொ. த. (சாதாரண) தேர்வுக்குரிய தமிழ் மொழிப் பாடப் பயிற்சிகள் இவை: 0 கல்வித் திணைக்களத்தின் புதிய பாடத் திட்டத்துக்கமைய எழுதப்பட்டவை. 0 பரீட்சைப் பகுதியின் மாதிரி வினாப் பத்திரத்தைப் பூரணமாகத் தழுவி எழுதப்பட்டவை. 0 புதுமுறை வினாக்கள் 80 கொண்ட பகுதி I, கட்டுரை, சுருக்கம், செய்யுள் விளக்கம், கடித வகை வினாக்கள் கொண்ட பகுதி II என்னும் இரண்டும் அடங்கியவை. 0 இரண்டாம் பகுதி வினாக்களுக்கான குறிப்புக்கள் கொண்டவை. 0 இரண்டாம் பகுதி வினாக்களுக்கும் இந்நூலிலேயே விடை அளிக்கக் கூடிய வசதி உண்டு. விலை

## இன்றைய பலன்

ஆடி மாதம் 20-ம் திகதி

[5-8-70]

மேஷம்- தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். தெய்வத்தின் துணையுண்டு.

ரிஷபம்- புத்திரவழியால் புகழ்வந்துசேரும். மற்றவர்களுக்கு உதவுவதில் முன்னணியில் நிற்பீர்கள். கனிவான தினம்.

மிதுனம்- பகைத்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள். பணவிவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். சிறப்பான தினம்.

கடகம்- இனியவை உரைத்தலின் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். குடும்பத்தில் தலைமை ஸ்தானம் கிடைக்கும். செல்வாக்கு வளரும்.

சிம்மம்- ஏக்கத்தின்சாயல் தாக்கும். எதிர்பாராதவிதமாகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளநேரிடும். நிதானம் வேண்டும்.

கன்னி- தொழில்புரியும் இடத்தில் திருப்தி நிலவும். சிலர் வாழ்க்கையில் இடமாற்றமும் ஏற்படலாம்.

துலாம்- அவசர முடிவின் மூலம் குறைகேட்கநேரிடும். பலவழிகளிலும் பணம் விரயமாகும். உடல்நலத்தை பேணிக்கொள்ளவும்.

விருட்சிகம்- வேண்டிய அ[illegible]விற்கு இன்று வெள்ளிப் ப[illegible]ம் துள்ளும். இதையச் சுமை அகலும். சகலதுறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

தனு- குறுக்குவழித் தலை[illegible] உங்கள் கோபத்தை [illegible]ம். மேலதிகாரிகளுடன்

## பலாலி கனிஷ்டபல்கலைகழக விளையாட்டுபோட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் நீலநிற இல்லம் 235 புள்ளிகளைப் பெற்று இவ்வருட சம்பியனாகியது. பச்சை இல்லம் 216 புள்ளிகளையும், சிகப்பு இல்லம் 179 புள்ளிகளையும் பெற்றன. பெண்கள் பிரிவில் நீல இல்லத்தைச் சேர்ந்த செல்வி அனற்ரு மாநிதி திஸநாயகம் நீளம்பாய்தல், 100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம் மூன்றிலும் முதலிடத்தைப் பெற்று சம்பியனானர்.

போட்டியில் கலந்து கொண்ட வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் திருமதி சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்கினார். போட்டி முடிவுகள் பின்வருமாறு:

**பெண்கள்**

100 மீற்றர்: செல்விகள் அனற்ரு மாநிதி திஸநாயகம், எஸ். தேவி சரஸ்வதி, ஆர். பூமணி.

200 மீற்றர்: செல்விகள் அனற்ரு மாநிதி திஸநாயகம், எஸ். தேவி பரஸ்வதி, வே. விஜயராணி.

நீளம் பாய்தல்: செல்விகள் அனற்ரு மாநிதி திஸநாயகம், ஆர். பூமணி, செ. ஞானேஸ்வரி,

பரிதிவட்டம்எறிதல்: செல்விகள் கே பாக்கியம், கே, மனோன்மணி, இ. செல்வலோஜினி.

குண்டெறிதல்: செல்விகள் கே. விஜயலட்சுமி, க. சரோஜினிதேவி, வி. சின்னமணி.

வலைப்பந்து 'சூட்டிங்' செல்விகள் ஆர். சி. இராசநாயகம், செ. ஞானேஸ்வரி, என். நிர்மலா.

75 மீற்றர் கயிறடித்தல்: செல்விகள் எஸ் தேவி சரஸ்வதி, சண்முகவடிவு, எஸ். சர்வேஸ்வரி.

சமநிலை ஓட்டம்: செல்விகள் வி. சின்னமணி, கே. பாக்கியம், சி. என். நிர்மலராணி.

**ஆண்கள்**

100 மீற்றர் ஓட்டம்: எம். ரீ. மல்கார்டீன், கே. ஏ. டபிள்யூ. புறுகான், கே. பாலசுப்பிரமணியம்.

200 மீற்றர் ஓட்டம்: எம். ரீ. மல்கார்டீன், கே, கணபதிப்பிள்ளை, கே. பாலசுப்பிரமணியம்.

400 மீற்றர் ஓட்டம்: எஸ். எஸ். நவயோகானந்தன், கே, பாலசுப்பிரமணியம், சி. பத்மநாபன்.

800 மீற்றர் ஓட்டம்: எஸ். எஸ். நவயோகானந்தன், வை. இராசரத்தினம், எஸ். குகனேந்திரன்.

1500 மீற்றர் ஓட்டம்: எஸ், எஸ் நவயோகானந்தன். எஸ். குகனேந்திரன், வை. இராசரத்தினம்.

500 மீற்றர் ஓட்டம்: எஸ். எஸ். நவயோகானந்தன், வை. இராசரத்தினம், ஏ. எல். எம். சலீம்.

பரிதிவட்டம் எறிதல்: மா. மரியதாஸ், வி. நிர்மலநாதன் எஸ். தியாகலிங்கம்.

உயரம் பாய்தல்: மா. மரியதாஸ், ஏ. எல். எம். காசிம் எம். ரி. மல்காடீன்.

நீளம் பாய்தல்: எம். ரீ. மல்கார்டீன், ஏ. எல். எம். காசிம், எஸ். ஏ. எம். முபரக்

குண்டெறிதல்: மா. மரியதாஸ், வி. நிர்மலநாதன், எஸ். தியாகலிங்கம்.

முக்கூட்டுப்பாய்தல்: மா. மரியதாஸ், ஏ. எல். எம் காசிம், சி. பத்மநாபன்.

ஈட்டி எறிதல்: எஸ். தியாகலிங்கம், வி. நிர்மலநாதன், எஸ். கிறிஸ்தோஸ்தம்.

(தே. நி)

## யாழ். ஆணழகன் போட்டி!
### வை. எம். சி. ஏ. நடாத்துகிறது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. விளையாட்டுப் பகுதி செப்டம்பர் இறுதிப்பகுதியில் ஆணழகன் போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி ஆகியனவற்றை நடாத்துகிறது.

யாழ்ப்பாண ஆண[illegible]கன் போட்டி, வை. எம். சி. ஏ. ஆணழகன் போட்டி, பாடசாலைகளுக்கிடையிலான 'செற் அப்' 'ஓவர்' வலைப்பந்தாட்டப் போட்டி, கழகங்களிடையேயான [illegible] செற்

## ஹட்டனில் தமிழரசு மாநாட்டுக்கு ஏற்பாடு

நல்லூர், செவ்

"ஆட்சி மாற்றத்தை அனுசரித்து மலைநாடெங்குமுள்ள தமிழ்பேசும் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கீழ் அணிதிரளவேண்டும்"

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின்கீழ் மலையகம் எங்கும் இயங்கிவரும் இலங்கைத் தொழிலாளர் கழகம், மலையக மக்களுக்கும், தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தமிழரசுக் கட்சியின்கீழ் இயங்கிவரும் எமது தொழிற்சங்கத்தை மலைநாடெங்கும் பரவலாக விரிவுபடுத்துவதன் மூலமே மலையகத் தொழிலாளர் பிரச்னையைத் தீர்க்கமுடியும். இதற்கு முன்னேடியாக அடுத்த மாதம் ஹட்டனில் மாபெரும் மாநாடு நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

## 'சலேஞ்' கேடயம் மீண்டும் பெற்றனர்

யாழ்ப்பாணம் புதன்

அகில இலங்கை சமூக சேவைக்கான 'சலேஞ்' கேடயத்தை யாழ். குருநகர் புனித கிறிஸ்தோப்பர் கடற்சாரணர்கள் பெற்றுக் கொண்டனர்.

கடந்த 28-ம் திகதி இராணி மாளிகையில்வைத்து மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவிடமிருந்து கேடயத்தை இவர்கள் பெற்றுக்கொண்டனர். கடந்தவருடம் இதற்கான கேடயத்தை இவர்கள்பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## இன்று ஆடிப்பூர விழா

இன்று யாழ் சுன்னுகம் வடக்கு அண்ணமகேஸ்வரர் ஆலயத்தின் ஆடிப்பூரவிழா நடைபெறும். பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் சுவாமி வீதிவலம் வருதலும் அன்னதான வைபவமும் இடம்பெறும். இரவு தவில் கச்சேரியும், இன்னிசைக்கச்சேரியும் சதுர்க்கச்சேரியும் இடம்பெறும். ஆலயபூசகர் திரு. சோ. இராமச்சந்திரஐயர்தலைமையில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## கண்டிக்கு எதிர்க்கட்சி மேயர்

கண்டி, செவ்

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தவரை கண்டி மாநகரசபை மேயராகத் தெரிவு செய்ய வேண்டும் என்ற தீர்மானம் குறித்து கண்டி மாநகரசபையின் ஐ. தே. கட்சி அங்கத்தவர்கள் ஆலோசனை நடாத்தி வருகின்றனர்.

சபையின் நிர்வாக சீர்கேட்டைத் தெரிந்திருந்தும் ஏன் மாநகரசபை கலைக்கப்படவில்லை எனக் கூறி சபையின் அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தைத் தொடர்ந்தே மேற்கண்டவாறு ஆலோசனை நடாத்தப்படுகிறது. எந்த ஆலோசனையை ஐக்கியதேசியககட்சி அங்கத்தவர்களில் பலர் அங்கீகரித்துள்ளபோதும் இதுவரை அவர்கள் ஒரு முடிவுக்கும் வரவில்லை எனத் தெரிகிறது.

## சிங்களத் தேர்வுப் பரீட்கை

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க ஊழியர்களுக்கான சிங்களத் தேர்வுப் பரீட்சை இம்மாதம் 8-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுபவர்களது பரீட்சை அனுமதிச்சீட்டுகள் பரீட்சைப் பகுதியினரால் அவ்வப்பகுதிச் செயலகஅதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


**யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!**

கடந்த 25 வருடங்களுக்குமேல் உங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, உங்கள் நகைகள் வைரத் தேவைகளை நம்பிக்கையாக செய்து, உங்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்றவர்கள், புதியதோர் ஸ்தாபனத்தை நிறுவி உங்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

ஆரம்ப நன்னளை எதிர்பாருங்கள்!

**எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்**

நகைகள்—வைர வியாபாரிகள்.

கன்னுநிட்டி, (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி
★ அடங்காபிடாரி புகழ் நடராசா

நடித்த

இலங்கையின் இயற்கைக் காட்சிகளைக்கொண்டு
உருவாக்கப்பட்ட சித்திரம்.

மீனு மூவிஸ்

# வெண்சங்கு

தயாரிப்பு: டைரக்ஷன்: W. M. S. தம்பு

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

## வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம்: பாலமுருகன் — சங்கீதம்: K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

பகுதி விளுக்களுக்கான குறிப்புக்கள் கொண்டவை. 0 இரண்டாம் பகுதி விளுக்களுக்கும் இந்நாலிலேயே விடை அளிக்கக் கூடிய வசதி உண்டு. விலை ரூபா 3-00. தபாற்செலவு வேறு. எல்லாப் புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

3039

---

கோட்டை, செவ்

பலஸ்தீன புரட்சி இயக்கமாகிய அல்ஃபதக் இயக்கத்தின் பிரச்சார அலுவலகமொன்று இலங்கையில் விரைவில அமைக்கப்படவிருக்கிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 5—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-00 முத்திநெறி. 6-30 கிராமசஞ்சிகை, 7-00 வாத்தியஇசை, 7-15 சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

**ஸ்ரீகாலிங்கன்** இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30

THE VALLEY OF GWANGI

**REGAL** JAFFNA
Daily 4-45, 7& 945-P.M.
TROPICS BY NIGHT
(Adults only)

சுளையும் அகலும், சகலதுறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

தனு- குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தை கிளறும். மேலதிகாரிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

மகரம்- நம்பிக்கைமோசடி நடக்கும். வியாபாரத்துறையில் நஷ்டமேற்படலாம். அதிக முதலீட்டை தவிர்த்துக்கொள்ளவும்.

கும்பம்- கன்னல் போல் இனிக்கும் வாழ்க்கை. காதலில் வெற்றிஉண்டு. பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும்.

மீனம்- இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கொடுக்கல்வாங்கல் மூலம் அபிப்பிராயமோதல் ஏற்படும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## பெற்றூர் ஆசிரியர் சங்கம் ஆராயும்

திருநெல்வேலி, செவ்

சிங்கள மொழியை ஒருபாடமாக படிப்பிக்கவேண்டுமென்ற யாழ். இந்துக் கல்லூரி பெற்றூர் ஆசிரியர் சங்கத் தீர்மானம் மீண்டும் ஆராயப்படவிருக்கிறது.

யாழ். இந்துக் கல்லூரி பெற்றூர் ஆசிரிய சங்கம் வருடாந்தக் கூட்டத்தின் போது, சிங்கள மொழியை ஒருபாடமாகக் கற்பித்தல் வேண்டுமென்று தீர்மானித்தது.

இத்தீர்மானத்தை மீண்டும் ஆராயுமுகமாக பெற்றூர் ஆசிரிய சங்கக் காரியதரிசி திரு. சிவராமலிங்கம் தலைமையில் இம்மாதம் 15-ம் திகதி கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்படுகிறது. இதற்கு சகலபெற்றூர் ஆசிரியர்களையும்சமுகமளிக்கும்படி அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

MANOHARA
JAFFNA
Daily 4-30, 7-00 & 9-45 p.m.
Poya days 10-30 A.M.
Shakespear's
ROMEO
and
JULIET
(Is no ordinary
Love Story)
Starring- 15 years old
OLIVIA HUSSEY (Girl)
17 years old LEONARD-WHITING (Boy)

போட்டி, வை. எம். சி. ஏ. ஆணழகன் போட்டி, பாடசாலைகளுக்கிடையிலான 'செற்அப்' 'ஓவர்' வலைப் பந்தாட்டப் போட்டி, கழகங்களிடையேயான 'செற் அப்' 'ஓவர்' வலைப்பந்தாட்டப்போட்டி ஆகியன இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஆணழகன் போட்டிகள் யாழ். வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெறும்.

போட்டிக்கான விண்ணப்பங்கள் செப்டம்பர் 10-ம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்படுகிறது. (ஈழநாடு நி)

## கைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

அம்பன், செவ்வாய்

வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி பிரிவிற்குட்பட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கிடையிலான கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து தலைமையில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருகின்றது. மேற்படிபோட்டியை குறிப்பிட்ட காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. சு. கதிர்காமத்தம்பி நடாத்திவருகின்றார். பொலிகண்டி பாரதி விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் இச்சுற்றுப்போட்டிக்கான சம்பியன் தெரிவு இம்மாதம் 30-ம் திகதி நடைபெறும். மேற்படி போட்டியில் வெற்றியீட்டும் கோஷ்டிகளுக்கு கந்தமுருகேசனார் ஞாபகார்த்த வெற்றிக்கேடயமும், இரத்தினசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கேடயமும் வழங்கப்படவிருக்கிறது.

## சமசமாஜ வா. மு. நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

புளியங்கூடல் சமசமாஜ வாலிப முன்னணியின் அமைப்புக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோதுபின் வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க சபாரத்தினம், உபதலைவர்: திரு ஆ விசுவலிங்கம், திரு அ தியாகராசா, இணைக்காரியதரிசிகள்; திரு ந முத்துக்கிருஷ்ணன். திரு கா பாலகிருஷ்ணன், தனாதிகாரி திரு கு பாலசுப்பிரமணியம். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

ஆரம்ப நன்னுளை எதிர்பாருங்கள்!

**எஸ். எல். எம். நீபி அன் சன்ஸ்**

நகைகள்—வைர வியாபாரிகள்.

கன்னுதிட்டி, (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுகக் கரைவதாலையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறுர்கள்.

**தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.**

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

ஜ0447 — ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ்போதனாசிரியர்குழு இலங்கை வருகிறது

## கணித, விஞ்ஞானப் பயிற்சி வகுப்புகளை இங்கு நடத்தும்

கொழும்பு, செவ்

பிரிட்டிஷ் போதனாசிரியர்களைக் கொண்ட இரு கோஷ்டியினர் அடுத்த வாரம இலங்கை வருகிறார்கள். இவர்கள் இங்கு ஆசிரியர்களுக்கான புதுமுறைப் பயிற்சி வகுப்புகளை நடத்துவார்கள்.

இக் கோடை விடுமுறை காலத்தின்போது இங்கிலாந்திலிருந்து சர்வகலாசாலைவிரிவுரையாளர், போதனாசிரியர்கள் ஆசிரியர்களாக மொத்தம் 190 கல்விமான்கள் 25 நாடுகளுக்கு விஜயம்செய்து 3000க்கும் அதிகமான உள்ளூர் ஆசிரிரிர்களுக்குப் பயிற்சி வகுப்புகளை நடத்துவார்கள். இவர்களில் இரு கோஷ்டியினரே இலங்கைக்கும் வருகிறார்கள். பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவின் கீழ் வருடாந்தம் இவ்வாசிரியப்பயிற்சி வகுப்புகள் ஒழுங்கு செய்யப் படுகின்றன.

இலங்கையில், கல்வி இலாகாவின் ஆதரவுடன் பிரிட்டிஷ் கவுன்சில் இப் பயிற்சி வகுப்புகளை நடத்தும் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் இம்முறை தீவிர கவனம் செலுத்தப் படும். விஞ்ஞானத்திற்கும் கணிதத்திற்குமாக தனித்தனியே இரு போதனாசிரியர் குழுக்கள் இங்கு வருவதால் இப் பாடங்களுக்கென வெவ்வேறான பயிற்சி வகுப்புகள் நடை பெறுகின்றன

விஞ்ஞானப் பயிற்சிவகுப்புகள் ஆகஸ்ட் மாதம் 13ந் திகதியிலிருந்து 26ந் திகதி வரை கட்டுப்பெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும். விரிவுரைகள் கருத்தரங்குகள், செய்முறை விளக்கப்பயிற்சிகளும் இதில் அடங்கும். இலங்கைப் பாடத்திட்ட அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள், இலங்கையிலுள்ள சர்வகலாசாலைகளின் போதனாசிரியர்கள் ஆகியோர்களும் இதில் கலந்துகொள்வார்கள்.

பிரிட்டிஷ் விஞ்ஞானப் போதனாசிரியர் குழுவிற்கு கிழக்கு அங்கிலியா சர்வகலா சாலையின் சிரேஷ்ட விரிவுரையாளரான டாக்டர் ஆர். எப். கெம்பா தலைமை தாங்குவார்.

கணிதப் போதனா பயிற்சி வகுப்புகள் ஆகஸ்ட் மாதம் 13ந் திகதியிலிருந்து 28ந் திகதிவரை பண்டாரவளையிலுள்ள அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும். இப் பயிற்சி வகுப்புகள் பிரிட்டனிலுள்ள லிசெஸ்டர் கல்லூரியின் சிரேஷ்ட கணித விரிவுரையாளரான திரு டி. எப். ஜோன் ஜெயன் தலைமையில் நடைபெறும். கணித போதனையில் கையாளப் படும் புதிய உத்திகளும் இப் பயிற்சி வகுப்புகளின்போது ஆசிரியர்களுக்கு விளக்கிக் காணபிக்கப்படும்.

இம்முறை இலங்கை உட்பட இந்தியா, பாகிஸ்தான், அன்டீகா, பாரேன், டொம்னீக்கா, மலாவி, ஐக்கிய அரபுக் குடியரசு, மால்டா, நைஜீரியா, சாடு, வெர்ஜின் தீவுகள், கமரூன், டோகோ, கென்யா, கயானா, சுவாஸிலாந்து, ஜிப்சால்டர், மலாசியா, காம்பியா, பார்படோஸ், ஜமேய்க்கா, மொன்ட்சரட், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இப் பயிற்சிவகுப்புகள் நடை பெறும்.

# 'உள்ளூர் எழுத்தாளருக்கு ஊக்கமளிக்க வழி'

## கம்யூனிஸ்ட் பிரமுகர் கூறுகிறார்

மாவிட்டபுரம், செவ்

''எமது நாட்டில் சகல இனங்களும் சுபீட்சமாக வாழ சோஷலிசம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் அந்நியஏகாதிபத்தியத்திற்கு சொந்தமாக இருக்கும் தேயிலை, இறப்பர் ஆகியவற்றை தேசிய மயமாக்கி தேச உடமையாக்கவேண்டும்''.

இவ்வாறு கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. ஏ. வைத்திலிங்கம் ... கூறுகிறார்கள் ஆனால் தமிழ் மொழியை வளர்க்கக் கூடிய முறைகளை கடைப்பிடிக்கிறார்களில்லை மொழி வளர வேண்டுமானால் நீதி மன்றம் விஞ்ஞான ஆராய்ச்சிகள் போன்றவற்றில் தமிழையே உபயோகிக்க வேண்டும்.

''இங்கு தமிழ்வளரவில்லை என பலர் கூறுகிறார்கள் இந்தியாவிலிருந்து வரும் சஞ்சிகைகள் சினிமாப் படங்கள் போன்றவற்றை ... படும் புத்தகங்கள் சஞ்சிகைகளையும் மற்றும் பொருட்களையும் மக்கள் வாங்குவதன் மூலமே எமது நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தவர்களாக நாம் திகழ்வோம். உள்ளூர் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பமளித்து அவர்களின்படைப்புகளுக்கு ஆதரவு கொடுத்து நாமும் முன்னேற முயற்சி செய்யவேண்டும்.

உண்மையான சோஷலிசம் ஏற்படவேண்டுமானால் சகலதும் இந்நாட்டின் உடமைகளாக்கப்படுவது அவசியம் இந்தியாவில் பல்கலைக் ...

# இஸ்ரேல் அரசாங்கத்தில் பிளவு:

# கூட்டணியிலிருந்து விலக 'கஹால்' கட்சி தீர்மானம்

டெல் அவிவ், ஆகஸ்ட் 4

**இஸ்ரேல் அரசாங்கத்தில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகளை ஏற்றுக் கொள்வதென்று திருமதி கோல்டா மெயரின் அரசாங்கம் முடிவு செய்ததைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.**

திருமதி மெயரின் அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்ந்திருந்த வலதுசாரி கஹால் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வதென்று முடிவு செய்துள்ளது. இக் கட்சியைச் சேர்ந்த ஆறு மந்திரிகளும் மந்திரிசபையிலிருந்து விலகிக்கொள்ளவிருக்கிறார்கள். நேற்று நடைபெற்ற கஹால் கட்சிக கூட்டத்தில் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வதற்கான தீர்மானம் 5 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. இதனால் கஹால் கட்சிக்குள்ளும் பிளவு ஏற்படக்கூடுமென்று கூறப்படுகின்றது. கஹால் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதை வாபஸ் பெற்றுக்கொள்வதென்று முடிவுசெய்துவிட்ட போதிலும், திருமதி மெயருக்கு ஆட்சிமன்றத்தில் போதிய பெரும்பான்மை இருக்கின்றது.

### இந்திய முடிவு

## கிழக்கு ஜெர்மன் வரவேற்பு

கிழக்கு பெர்லின் ஆகஸ்ட் 4

கிழக்கு ஜெர்மனியுடனான ராஜியத் தொடர்புகளை 'கொன்சூலர்' அந்தஸ்துக்கு உயர்த்திக் கொள்வதென்ற இந்திய அரசாங்கம் செய்துள்ள முடிவு குறித்து கிழக்கு ஜெர்மனி மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றது. இந்த நடவடிக்கை இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வளர்ப்பது மாத்திரமன்றி உலக அமைதிக்கும்மேலும்உறுதியளிப்பதாகவிருக்கும் என்று கிழக்கு ஜெர்மன் அரசு தெரிவித்திருக்கின்றது.

# அரபு மாநாடு ஆரம்பமாகவில்லை

திட்டமிடப்பட்டிருந்தபடி அரபுநாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாடு நேற்று ஆரம்பமாகவில்லை. ஜோர்டான், சிரியா, பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஆகிய மூன்று தூதுகோஷ்டிகள் மாத்திரமே நேற்று லிபியா தலைநகருக்கு வந்திருந்தன. ஐக்கிய அரபுக்குடியரசு, சூடான், போன்ற நாடுகளிலிருந்து தூது கோஷ்டிகள் வந்து சேரவில்லை. லிபியாத் தலைவர் கேணல் கடாபி தலைநகர் வந்து சேரும் வரைக்கும் மாநாடு ஒத்திப்போடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. கேணல் கடாஃபி கெய்ரோவில் அதிபர் நாஸருடன் ஆலோசனைகள் நடத்திய பின்னர் ஈராக் தலைநகர் சென்று அங்கு ஈராக் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திவருகின்றார் ஐக்கிய அரபுக் குடியரசுக்கும், ஈராக்கிற்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளைக் களையும் முயற்சியில் கேணல் கடாஃபி ஈடுபட்டிருக்கிறார் பாக்தாத்திலிருந்து அவர் திரிபோலிக்குப் புறப்படுவார்.

### குனார் ஜாரிங் ஆலோசனை

மேற்காசியாவுக்கான ஐ நா, அமைதித் தூதர் நேற்று அமெரிக்க ராஜாங்க மந்திரி ரோஜர்ஸுடன் ஆலோசனைகள் நடத்தினார். மேற்காசிய அமைதிக்கான அமெரிக்க யோசனைகளை முதலில் தெரிவித்தவர் திரு. ரோஜர்ஸ் தான்

டாக்டர் ஜாரிங் நேற்று ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டையும் சந்தித்துப் பேசினார்.

### அணு சாதனம் பொருத்திய

# அமெரிக்காவின் பன்முனை ஏவாயுதம்

## நீருக்கடியில் வெற்றிகர சோதனை

## வேலைநீக்கம் நியாய மில்லையாம்

### அமைச்சருக்கு மகஜர்

விஸ்வமடு, செவ்வாய்

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தில் டிராக்டர் சாரதியாக கடமையாற்றிய எஸ். பூபாலசிங்கம்என்பவர் டிராக்டரை விபத்துக்குள்ளாக்கினார் என்றகுற்றச்சாட்டின் பேரில் கடந்த சில மாதங்களுக்கு முதல் மேற்படி கூட்டுத்தாபனத்தின் பொறுப்பதிகாரியால் தற்காலிக வேலைநீக்கம் செய்யப் பட்டாராம்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான பிரஸ்தாப டிராக்டர் சாரதி, தாம் வேலையின்றிக் கஷ்டப்படுவதாயும், தாம் எவ்விதவிசாரணையுமின்றி வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாயும், இது சம்பந்தமாக நியாயம் காட்டவேண்டுமென்றும் கோரும் மகஜரொன்றை கிளிநொச்சி சுதந்திரக்கட்சிக்கிளையின் உதவியுடன் சம்பந்தப்பட்ட அமைச்சருக்குச் சமர்ப்பித்துள்ளார்.

## எளியவாழ்க்கை

வத்தளை, செவ்வாய்

'எளிமையான வாழ்க்கை முறை' இயக்கத்தை நாடெங்கும் ஆரம்பிக்கக் லங்கா சுதேசிய இயக்கம் திரு. சி. பி. காரியவாசத்தைத் தலைமையாகக் கொண்டு நாட்டின் பல பகுதிகளிலும் பொதுக்கூட்டங்கள் நடாத்தவுள்ளது.

இவ்வியக்கத்தினர் ஏற்கனவே கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகாவைச் சந்தித்து எளிமையான வாழ்க்கை இயக்கம் பற்றியும் நாட்டின் இன்றைய பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்த இவ்வியக்கம்எந்தவகையில் உதவும் என்பதுபற்றியும் அவருக்கு விளக்கியுள்ளனர்.

## கொக்கலையில் பல்கலைக்கழகம் வேண்டும்

அஹன்கம, செவ்வாய்

தென்மாகாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் ...

# புரட்சிவாதிகள் நிபந்தனை: உறுகுவே அரசு மறுப்பு

மொன்டிவிடியோ, ஆகஸ்ட் 4

உறுகுவேயில், கடத்திச் செல்லப்பட்ட பிராஸில் நாட்டு கொன்சல் ஜெனரலையும், அமெரிக்க காவல் அதிகாரியையும் விடுதலை செய்வதற்கு புரட்சிக்காரர்கள் விடுத்தநிபந்தனைக்கு இணங்க உறுகுவே அரசாங்கம் மறுத்துவிட்டது.

இந்த இரு ராஜதந்திரிகளையும் விடுதலைசெய்வதானால் அரசாங்கம் சிறைப்படுத்தி வைத்துள்ள இடதுசாரி புரட்சிவாதிகள் அனைவரையும் விடுதலைசெய்யவேண்டும் என்று கோரிக்கைவிடுத்திருந்தனர். இந்தக்கோரிக்கைகளை ஏற்பதனால் நாட்டின் சட்டங்களுக்குமாறாக செயல்படவேண்டும் என்றும் புரட்சிவாதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிப்பதாயும் நாட்டில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட வேண்டியிருக்குமென்றும் இப்பொழுது அப்படியான ஒரு நிலைமை ஏற்படவில்லையென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# சிறைக்கைதிகள் முன் கந்தபுராண விரிவுரை!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம். அரசினர் சிறைச்சாலையில் உள்ள முருகன் ஆலயத்தில் போயா நாட்களில் நடைபெற்று வரும் விசேட வழிபாட்டுடன் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் சைவசமய உபந்நியாசம் நிகழ்த்திவருகின்றார். சென்ற ஒரு வருடகாலமாக நடாத்தப்பட்டுவந்த பெரிய புராண விரிவுரை இம்மாதம் 1-ம் திகதி விசேட வழிபாட்டுடன் நிறைவெய்தியது. இம்மாதம் 9-ந் திகதியிலிருந்து கந்தபுராண விரிவுரை தொடர்ச்சியாக நிகழவிருக்கின்றது.

சிறைக் கைதிகளும். விளக்கமறியலில் உள்ளோடும் சிறந்த முறையில் பூசை வழிபாட்டைச் செய்வதோடு உபந்நியாசங்களையும்தொடர்ந்து கேட்டுவருவது பாராட்டத்தக்கது. ஆலயம் புனிதமான முறையில் வைக்கப்பட்டிருக்கின்றது. மேற்படி உபந்நியாச நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் ஆதரவுடன் நடைபெற்றுவருகின்றது.

# 'எழுத்தாளர் அனைவரும் சேர்ந்து இயங்குவோம்'

## நூல் வெளியீட்டுவிழாவில் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

'இன்று தமிழ் எழுத்தாளன் என்பவன் ஓர் அனாதைப்பிள்ளை. அவனுக்கு உதவவேண்டும் என்னும் நன்னோக்கம் கொண்டவர் எவருமே இல்லை எனலாம். அவன் தனது பிரச்னைகளைத் தனியனாகவே சந்திக்க வேண்டியவனாய் உள்ளான், இந்நிலையில் எழுத்தாளராகிய நாம், எமக்குள்ளே எவ்வளவு முரண்பாடுகள் இருந்த போதிலும் ஓர் இயக்கமாக இயங்கவேண்டும். கூடவே எமது முரண்பாடுகள் முற்போக்கானவையாகவும் தனித்துவமானவையாகவும் அமையும் போது அவை வரவேற்கப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன'

இவ்வாறு திரு. டொமினிக் ஜீவா, திரு. மு. தளையசிங்கத்தின் 'போர்ப்பறை', திரு மு. பொன்னம்பலத்தின் 'அது' ஆகிய இரு நூல்க...

அடுத்துப் பேசிய செங்கை ஆழியான், 'போர்ப்பறை' நூல் கூறும் தத்துவ நோக்கை மிக விரிவாக ஆராய்ந்தார்.

'அது' என்னும் கவிதைத் தொகுதி பற்றி காரை செ. சுந்தரம்பிள்ளையும் மு. புஷ்பராஜனும் விமர்சித்தனர்.

'போர்ப்பறை' முதல் பிரதியை திரு. ப. கதிரவேலுவும், 'அது' முதல் பிரதியை திரு. எஸ். ஆர் எஸ். தேவதாஸனும் வாங்கினர்

விழா டாக்டர் வாமதேவன் தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

## மாற்றம் ரத்து

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து வரணி மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட விவசாயப் போதனா ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை தேசிய மயமாக்கி தேச உடமையாக்கவேண்டும்''.

இவ்வாறு கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. ஏ. வைத்திலிங்கம் சுன்னுகம் பட்டினசபை ஆராய்வு குழுகருத்தரங்கில் கலந்து உரையாற்றுகையில் கூறினர்


டாக்டர் வரதராசன் தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது -

இந்நாட்டில் தமிழ் மொழி வளரவில்லை என யோசிக்க வேண்டும்.

''இங்கு தமிழ்வளரவில்லை என பலர் கூறுகிறுர்கள் இந்தியாவிலிருந்து வரும் சஞ்சிகைகள் சினிமாப் படங்கள் போன்றவற்றை தடை செய்வதன் மூலமே இங்கு தமிழைவளர்க்க முடியும். இந்தியா இதுகாலம்வரை எம்மிடமிருந்து பெற்ற புகையிலையைக் கூடநிறுத்தி விட்டது, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் புத்தகங்கள் சஞ்சிகைகள் சினிமாப் படங்கள்யாவும் தடைசெய்யப்படவேண்டும் உள்ளூரில் பதிப்பிக்கப் செய்யவேண்டும்.

உண்மையான சோஷலிசம் ஏறபடவேண்டுமானுல் சகலதும் இந்நாட்டின் உடமைகளாக்கப்படுவது அவசியம் இந்தியாவில் பல்கலைக் கழகங்களில் தாய்மெழியில் கல்விகற்க முடியாதிருக்கிறது' ஆனல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தாய் மொழியில் படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது இதிலிருந்து இங்கு தமிழைவளர்க்க பல வழிகளிலும் நல்ல வசதிசெய்து தரப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது''








ஒரே முறையில் 3 கலன் தெளிக்கிறது.

ஹேஸ்ப்ரே 300 பி. ரி.

பீச்சு முனையில் தட்டிவிட்ட மாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை உள்ளதால் வெளியே சிவிறப்படும் மருந்தின் அமுக்கத்தை குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளக்வுக் கட்டுப்படுத்த ஏதுவாக்குகிறது. இது விசேஷமாக தேயிலையில், பயிர்களுக்குச் சேதம் விளையும் என்ற பயமில்லாமல் களைக் கொல்லிகளை தெளிக்கப் பயன்படுகிறது.

துரு தடுப்புப் பித்தளையில் உருவான 300 பி. ரி. பீச்சுக் குழாய் இரட்டை முனைகளைக் கொண்டுள்ளது. இதனல் மருந்தை அகன்ற பரப்பளவிற்கு தெளிக்கலாம். அத்துடன், இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் இயக்குவதற்கு, சுழற்றக்கூடிய ஒரு நெம்புகோலும் உண்டு.

உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும். VISION 74/70

தயாரிப்போர்:
ஹேலீஸ்லிமிட்
400, டீன்ஸ் ரோட்,
கொழும்பு 10.
தொலைபேசி:
96331

## நீருக்கடியில் வெற்றிகர சோதனை

நியூயோர்க், ஆக. 4

வெகுதூரம்வரை ஊடுருவிப் பாய்ந்து தாக்கக் கூடிய புதுரக ஏவாயுதமொன்றை அமெரிக்கா நீருக்கடியில் வெற்றிகரமாக சோதித்துள்ளது. அணு ஆயுத சாதனங்கள் பொருத்தப்பட்ட பல முனைகளைக்கொண்ட இந்த ஏவாயுதம் இதுவரைகாலமும் இருந்தவைகளை விட மிக சக்திவாய்ந்ததாகும். இதன் முனைகள் பல்வேறு இலக்குகள் நோக்கிப் பாயக்கூடியவை. இம்மாதிரியான அணு சாதனங்கள் பொருத்தப்பட்ட புதுரக ஏவாயுதம் ஒன்று நீருக்கடியில் சோதிக்கப் பட்டது இதுவே முதல் தடவை.

அத்திலாந்திக் சமுத்திரத்தில் இடம்பெற்ற இந்த ஏவாயுத சோதனையை சோவியத் கப்பலொன்று மிக அருகிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தது. இந்தச் சோவியத் கப்பல் சோதனை நடைபெற்ற பகுதிக்கு வந்ததால் சோதனை தாமதமாயிற்று ஏவாயுதம் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலொன்றிலிருந்து செலுத்தப்பட்டது ஏவாயுதத்தின் சிதறிய பகுதிகளை சோவியத் கப்பல்தேடி எடுத்துக்கொள்ள முயற்சி செய்தது. இதனல் அமெரிக்க கப்பலுடன் மோதிக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பின்னர் சோவியத் கப்பல் ஒதுங்கிக்கொண்டதால் அமெரிக்க ஏவாயுதத்தின் சிதறிய பகுதிகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டது.

— —

## உப அதிபருக்கு பிரிவுபசாரவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி உப அதிபர் திரு. கா. தம்பிப்பிள்ளை ஓய்வுபெறுவதை யொட்டி நாளை பிரிவுபசாரவிழாநடைபெறும்.

கழகத்தலைவர் திரு. செ. சபாரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பல பெரியார்கள் உரையாற்றுவர் பாராட்டுப்பத்திரமும் பொற்கிழியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன்

''இறுதிமூச்சு உள்ளவரை நான் எனது வட்டார மக்களுக்குச் சேவைசெய்வேன். தொழில், கல்விமற்றும் மின்சாரம் முதலிய தேவைகளை நான் கவனிப்பேன்'' என யாழ். மாநகரசபையின் 4-ம் வட்டார உறுப்பினரான திருமதி அந்தோனியாப்பிள்ளை சாமிநாதர், யாழ். திருவள்ளுவர் முன்னணிக் கழகம் அளித்தவரவேற்பு உபசாரவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

இப்பகுதி மக்களின் வசதிக்காக மாநகரசபையினுல் அமைக்கப்பட்ட நீர்க்குழாயை திருமதி சாமிநாதர் திறந்துவைத்தார்.

கழகத்தலைவர் திரு. க. சி. கிருஷ்ணன், மலர்விழி எம். ஸி. யேசுதாசன், திருவாளர்கள் சூ. சிவலிங்கம், உ. இ. தமிழ்ச்செல்வன், சி. அன்ரன் ஆகியோரும் விழாவில் பேசினர்.

— —

## சோஷலிச பொருளாதார அமைப்பு உருவாகவேண்டும்

அனுராதபுரம், செவ்

''சோஷலிசத்தின் முழுப் பலனையும் மக்கள் அடைய வேண்டுமானுல், சோஷலிச பொருளாதார அமைப்பு உருவாக்கப்படவேண்டும். பொருளாதார வருவாய்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பும் மக்கள் கையில் இருக்கவேண்டும்.''

வடமத்திய மாகாண லங்கா சமசமாஜக் கட்சிக் கிளையின் காரியதரிசி வண. டபிள்யு. விஜித தேரோ அனுராதபுரம் பாதுகாப்புச்சபை மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 27வது மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''பத்திரிகைகளும் சோஷலிசம் பற்றி எழுதுகின்றன. அரசியல் கட்சிகள் சோஷலிசம் பற்றிப் பேசுகின்றன. ஆனல் இந்த அரசாங்கம் ஒரு சோஷலிச அரசாங்கம் அல்ல; ஆனல் சோஷலிசத்தை அடைய முயற்சிக்கிறது.''

## பல்கலைக்கழகம் வேண்டும்

அஹன்கம, செவ்வாய்

தென்மாகாணத்துக்கு ஒரு பல்கலைக் கழகம் கொக்கலையில் நிறுவப்படவேண்டுமென அரசைக்கோரும் தீர்மானமொன்றைகதலுவா கிராமசபை நிறைவேற்றியுள்ளது. சிங்கள எழுத்தாளரும் நாவலாசிரியருமான திரு. மாட்டின் விக்ரமசிங்கா பிறந்த ஊராகிய கொக்கலையில் பல்கலைக் கழகம் நிறுவப்படுவது பொருத்தமானதொன்றுகும் என மேற்படி கிராம சபையினர் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தீர்மானத்தை கிராம சபைத் தலைவர் திரு. எம். எம். சுகததாஸா தெரிவித்தார்.

வேண்டியவையாகவும் இருக்கின்றன'

இவ்வாறு திரு. டொமினிக் ஜீவா, திரு. மு. தளையசிங்கத்தின் 'போர்ப்பறை', திரு மு. பொன்னம்பலத்தின் 'அது' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவில் 'போர்ப்பறை' பற்றி விமர்சித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஆதரவில் இந்நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நமக்குள்ளே 'அது, நமக்குள்ளே இது' என்று ஒருவரை ஒருவர் 'சொட்டை' சொல்லி இலக்கிய உலகை களங்கப்படுத்துவதைவிட, தத்துவரீதியான முரண்பாடுகளும் தர்க்கங்களும் அவசியமானது, நமது வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை' என்று திரு. ஜீவா சொன்னர்.

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து வரணி மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட விவசாயப் போதனுசிரியர் திரு பொன். கணேசமூர்த்தியின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## ஆஸ்பத்திரி நிதிக்கு அன்பளிப்பு

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி முன்னுள் உப சபாநாயகர் திரு மு. சிவசிதம்பரத்துக்கு அன்பளிப்பாக வழங்கிய சுமார் 2500 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி நிதிக்காக வழங்கினர்.




குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கள்ளமற்ற உள்ளத்தைப் பெற்ருல் இறைவன் மிக எளிதில் கிட்டுவான். கற்கள் இல்லாத நல்ல நிலத்தில் நடும் வித்து எளிதில் முளை கிளம்புவது போல். — ஸ்ரீராமகிருஷ்ணர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 20-ந் திகதி (5 - 8 - 70)


## தமிழருக்குப் பாதுகாப்பு

புதிய அரசியல் அமைப்பு மிக விரைவில் உருவாக்கப்படவிருக்கிறது. இந்த அமைப்பு பெரும்பாலும் ஒரு நிரந்தர அமைப்பாகவே இருக்கப்போகிறது. புதிய அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் குறிப்பாக தமிழர்களின் உரிமைகளுக்கு என்னவிதமாகப் பாதுகாப்பளிக்கப்படவிருக்கிறது; உத்தேச அடிப்படை உரிமைகள் சாஸனத்தின் உள்ளடக்கம் என்னவாக இருக்கும்? சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக புதிய அரசியலமைப்பில் என்னென்ன அம்சங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; இதற்கு எப்படி முயற்சிசெய்யலாம்?

அரசியல் நிர்ணய சபைக் கூட்ட அங்குரார்ப்பண வைபவத்தின் பின்னரும் அரசியல் நிர்ணயசபையாகவும் ஆட்சிமன்றம் கடமையாற்றத் தொடங்கியபின்னரும் மேற்கண்ட கேள்விகளும் அபிப்பிராயங்களும் அதிகரித்துள்ளன

இந்தக் கேள்விகளுக்கு எல்லோரும் ஒரேவிதமான பதிலைக் கூறமாட்டார்கள். அபிப்பிராயங்கள் வேறுபடலாம். ஆனாலும் பலருடைய அபிப்பிராயங்களையும் அறிந்து ஒரேகுரலில் யோசனைகளைத் தெரிவித்தால் அதன் காத்திரம் அதிகமானதாக இருக்கும்.

இந்தவகையில் மேற்கண்ட கேள்விகளுக்கு வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலுமுள்ளவர்களின் அபிப்பிராயத்தையும் பதில்களையும் அறிந்துகொள்வதற்காக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இம்மாதம் ஒன்பதாம் திகதி பிற்பகல் கொழும்பில் ஒரு மகாநாட்டைக் கூட்டுகிருர். கட்சி ரீதியில் அல்லாமல் தனிப்பட்டமுறையில் அவர் இந்த மகாநாட்டைக் கூட்டுகிருர்.

[illegible]

விட்ட தவறுகளை இனியும் விடக்கூடாதென்றே அவர்கள் கூறுகின்றனர்.

அரசியல் நிர்ணய சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழ்ப்பிரதிநிதிகள் கலந்துகொள்வதா, அக் கூட்டத்தில் அவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றி ஆராய்வதற்காக அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு முதல்நாள் கொழும்பில் திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் ஒரு கூட்டத்தைக் கூட்டினுர்.

புதிய அரசியல் அமைப்பில் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழிப் பிரஜைகளின் உரிமைகளை எப்படிப் பாதுகாக்கலாமென்பது பற்றி ஆராய்வதற்காக ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமனப் பிரதிநிதியுமான ஜனுப் அஸீஸ் கொழும்பில் சில தினங்களுக்கு முன் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நாட்டில் வாழும் தமிழ்மக்கள் அவர்கள் வம்சாவழிப் பிரஜைகளானுலும் அவர்களுக்கு இது ஒரு நெருக்கடியான காலம் என்பதை யாரும் மறுக்க முடியாது. தங்கள் எதிர்கால தலைவிதி நிர்ணயிக்கப்படும் இச்சமயத்தில் தமிழர் ஒன்றுகூடி, அரசியல் சட்டத்தில் தங்களுக்கு எவ்வித பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமென்பதைப்பற்றி கலந்து யோசிப்பது பலவிதங்களிலும் அவசியமாகும். இதற்கு திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் கூட்டும் கூட்டம் பெரிதும் பயன்படுமென்று நம்புவது மிகையல்ல.

## அதிகாரிக்கு பாராட்டுவிழா

ஊர்காவற்றுறை, திங்கள்

[illegible]

## உணர்விலும் சுவையூட்டி நினைவில் நிறைந்த யாழ் இந்துகல்லூரிஇரவு விருந்து!

கத்தி, கரண்டி, முள்கரண்டி என்பன மின்சாரபல்புகளின் ஒளியினுல் பளபளத்தன. சுத்தமான பிளேட்டுகள், 'ஜிஞ்சபியர்' போத்தல்கள், கண்ணுடி தம்ளர்கள். இவையெல்லாம் ஒழுங்காக அடுக்கப்பட்ட மேசைகளின் மேல் விரிக்கப்பட்ட வெண்மையான துணிகளின் மேல் விளங்கின.

கிறேப் கடுதாசிகள் அவற்றின் இடையிடையே பலூன்கள் ஊதிப்புடைத்து மின்சார ஒளியுண்டு பளபளத்தன.

கடந்த திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினர் வரவேற்பை ஏற்று குமாரசாமி மண்டபத்துக்குச் சென்றபோது இந்தக் காட்சிகளைக் கண்டேன்.

எனக்கு அருகே இருந்த கல்லூரி மாணவன் சுத்தத் தமிழிலும் பண்பாட்டிலும் குடித்தவர் போலும் ஏன் இப்படி? என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். எதிர்காலத்தில் இந்தமாதிரியான வைபவத்தில் நீங்கள் கலந்து கொள்ளவேண்டியிருப்பின் அனுபவ ரீதியாக இப்போதே அறிந்து கொள்ள வாய்ப்பாகும் என்றேன் நான். ஆனுல் அங்கே

கரண்டி, முள்ளுக்கரண்டி, கத்தி இவற்றைப் பாவிக்கக் கூடியவாறு பரிமாறப்பட்ட உணவுகள் விளங்கின.

உணவிலே அறுசுவைகள் உண்டு. அப்படியானுல் இந்துக் கல்லூரி உணவு இனித்தது என்று நான் எப்படிச் சொல்ல முடியும். உணவு வரிசையில் இறுதியாகப் பரிமாறப்பட்ட 'புருட்சலட்' இனிக்காமல் புளிக்கவா செய்யும்? நாம் எதையெதையெல்லாம் கண்டாலும் இறுதி நிகழ்ச்சியிலே இனிப்பான சுப செய்தியுடன் செல்வதைத்தானே விரும்புகிறோம். இதுதான் தமிழ் மரபு.

உணவு மாத்திரமல்ல அங்கு நடைபெற்ற பேச்சுக்களும் உள்ளத்தில் இனித்தன.

விருந்துக்கு வந்திருந்த சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ். மத்திய

[illegible]

படி மகளிர் முதலிடம் வகித்து வந்திருப்பது புளிப்பான செய்தியல்ல' என்ருர்.

"பாரதிகாட்டிய புதுமைப் பெண்ணின் பிரதிநிதிகள் தான் சுண்டிக்குளிப் பெண்கள் இல்லாவிட்டால் திருவாளர் செல்லையா உபஅதிபர் பதவிவகிக்க திருமதி செல்லையா சுண்டிக்குளி அதிபராக விருப்பாரா'' என்ருர்.

இப்படி எடுத்துக்கொண்டு சொல்லிக்கொண்டுபோனுல் அவர்கள்தந்த விருந்துபோல் நிறைந்துகொண்டு போகும்.

முன்னுளில் திருத்தமடையாததென்று கருதப்பட்ட இந்துக்கல்லூரி இன்று வடக்குப் பிராந்தியத்தில் மட்டுமல்ல தென்பகுதியினரும் விரும்புமளவுக்கு பலதுறைகளிலும் முன்னேறியுள்ளது இங்கு அட்வான்ஸ்லெவல் பரீட்சையில் 41 மாணவர்கள் 4 பாடங்களுடன் சித்தியடைந்து நல்ல சாதனைகளை காட்டியுள்ளனர்.

விருந்து தந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்த நமக்கு பிரதமவிருந்தாளியான டாக்டர் சண்முகநாதனின் மேற்கண்ட அடக்கமான பேச்சில் இந்துக்கல்லூரியின் வளர்ச்சி குறிக்கப்பட்டது.

ஒகோ சொல்லமறந்துவிட்டேனு இந்தவிருந்தில் பிரதம விருந்தாளியாகக் கலந்துகொள்ளவிருந்த வடமாநிலக் கல்வி அதிபதி திரு. வி. சங்கரலிங்கம் மாணவர் புறியாணிக்கு அவர் பெயரான சிவ சங்கரலிங்கம் என்று பெயரைக் கொடுத்திருந்த போதிலும் அதை அவர் ருசி பார்க்கமுடியவில்லை. அவரிடத்தை நிரப்பிய டாக்டர் சண்முகநாதனை மாணவர் மன்ற தலைவர் வெகுவாகப் பாராட்டினுர். சுண்டிக்குழி மாணவி செல்வி கமலாம்பிகை ஐயாத்துரை, திரு. மனோவீரசிங்கம் ஆகியவரின் பேச்சைத்தொடர்ந்துபேசிய டாக்டர் அன்டன் ஜயசூரியாவின் பேச்சை நினைவில் வைக்காமலிருக்க முடியாது அவர் பேசியவற்றில் சில வருமாறு:

"தாவர உணவைவிட மாமிச உணவு உயர்ந்தது என்று கொள்வது தவறு. மாமிசஉணவுக்கு ஆதாரமே தாவர உணவுதான், டாக்ட[illegible] ...பசும் புகழ்ந்திடஎங்கும்' என்றமாணவர்களின் இனிய

### இன்று

## தேவிஉபாசனைக்குரிய ஆடிப்பூரதினம்

— திருமதி மங்கையர்க்கரசி லோகேஸ்வரன் —

ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தை இந்துக்கள் விசேட நாளாகக் கொண்டாடுவர். சிறப்பாக தென்னிந்தியாவிலே இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. மக்களிடையே புதிய நம்பிக்கையைத் தோற்றுவிக்கவும் மகிழ்ச்சியை உண்டாக்கவும் சமய விழாக்கள் உதவுகின்றன. பிரார்த்தனை செய்வதன் மூலம் உள்ளத் தூய்மை ஏற்பட்டு கவலை ஒழிகிறது. இவ்வகையில் ஆடிப்பூரமும் ஒரு விழா நாளாக அமைந்துள்ளது.

உலக அன்னை சக்தி இவ்வுலகில் திருவவதாரம் செய்த தினம் ஆடிப்பூரம் என்றுகூறித் தேவி உபாசகர்கள் இந்நாளைத் தாங்களும் தங்கள் அன்பிற்குரியவர்களும் நல்வாழ்வுபெறப் பிரார்த்திப்பார்கள். உமைக்குரிய தினம் வெள்ளிகிழமை. ஆடிப்பூரமும் வெள்ளிக்கிழமையும் வந்து பொருந்தும் நாள் அமைந்துவிடுவது அதிசிறப்பென நம்பப்படுகிறது.

உண்மையின் பரிவாரங்களாக எட்டுச் சக்திகள் தொழிற்படுகின்றன. இந்தச் சக்திகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு போகங்கட்கு அதிபதிகள் வீரம், வெற்றி, செல்வம், கல்வி, வாழ்வு எனப் பலதையும் அளிப்பன. இச்சக்திகளை வசப்படுத்துவோர் ஞானிகளும் யோகிகளுமாவர். இவை வறுமையைப் போக்கிப் பல்வேறு சுகமளிக்கவல்லன. இவற்றைக் கைவரப்பெற முயலுவோர் ஆடிப்பூர நாளில் அந்த முயற்சியைத் தொடங்குவர். தேவியைக் குறித்து உபாசிப்பவர்களுக்கும்பலன் கைகூடுவதற்குக் கேட்கவேண்டுமா?

தேவிக்குரிய நாளான இந்நாளை ஆண்டாள் அவதாரம் செய்த நாளாக வைணவர் கருதி [illegible]படுவர். பூமிதேவி இந்நாளில் ஆண்டாளாக அவதரித்தாள் என அவர்கள் நம்புகிருர்கள். 'திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழிய என வைண[illegible]ஆழ்வார் பாடிப் போந்துள்

லம் உலக பந்தங்களைத் துறந்து எம்பெருமானிடம் மாசற்ற அன்பு பூண்டு வாழ்கிறவர்கட்கு இறையருள கிட்டும் என்பதை நிரூபித்தவர் தேவியின் அவதாரமான ஆண்டாள் ஆடிப்பூரத்தன்று திருத்துழாய் மூலத்தில் அவதரித்து பெரியாழ்வார் புதல்வியாக வளர்ந்து வடபெருங்கோயிலுடையானை நாயகபாவத்தில் வழிபட்டு மலர்மாலை சூடிக்கொடுத்து மணாளனை அடைந்த மங்கை நல்லாள் ஆண்டாள். மக்கள் மனதில் மண்டிக்கிடந்த மாசு, அஞ்ஞான இருளகற்றித் தூய வாழ்க்கைக்கு வழிகாட்டியவர். எனவே ஆண்டாளை வைணவர் மாத்திரமன்றி இந்துக்களனைவரும் கருணையின் கொழுந்து எனப் போற்றி வழிபடக் காணலாம் மனிதப்பிறவி எடுத்து கண்ணனை நினைந்துருகி அரங்கனை மணந்து அவனுடன் ஐக்கியமான ஆண்டாளுக்குப் பல கோயில்களமைத்து இத்தினத்தில் விழா எடுக்கக் காணலாம்.

ஆடி மாதத்தில் பூரநட்சத்திரம் 'பதினெட்டாம் பெருக்கு' என்னும் விழாவுக்குடைய நாளாம் தமிழ்நாட்டைப் பண்டைக்காலத்தில் ஊட்டி வளர்த்த நதியான காவிரி, அன்று புதுவேகத்துடன் உற்சாகம் கரைபுரள பொங்கிப்பெருகி வருவாள். கோடைகாலமானபோதிலும் ஆடிமாதத்தில் மாத்திரம் மழை வருஷிக்கிறது. இந்த வெள்ளத்தில் மக்கள் திரண்டு வந்து புதுநீராடி, இறைவனை நீராட்டி வெள்ளத்தில் முழுகுகின்றனர். பண்டங்களைக் கொண்டு வந்து பெருகி ஓடும் வெள்ளத்தில் போடுகின்றனர். இன்று குற்றுலத்திலும் ஆடிப்பூரத்தன்று பலபகுதியிலிருந்தும் மக்கள் சென்று நீராடி மகிழ்கின்றனர். இதைக் குற்ருலக் குறவஞ்சி

"ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பதுயோகியர் உள்ளம்"

என அழகுற வர்ணிக்கின்றது. பண்டை அரசர் பதினெட்டாம் பெருக்கைக்

## ஜயாரன் எழுதுவது:

கொழும்பு கொட்டாஞ்சேனை பிள்ளையார்கோயிலில் பஞ்சமுக விநாயகருக்கு கும்பாபிஷேகம் செய்து மண்டலாபிஷேகம் நடந்தது. யாழ்ப்பாணத்திலே இவ்வளவு இலட்சணமான மூர்த்தியை வார்த்துள்ளதானது பெருமைப்படக் கூடியதாகும். நமது கலைஞர்களுக்குப் போதிய சந்தர்ப்பமும் உற்சாகமுமளிப்பதாயின் அவர்களில் சிலர் உலகப் புகழும் பெறக்கூடியதாக இருக்கும். அங்கு பூசைகளெல்லாம் பக்திசிரத்தையுடன் முறையாக நடந்தன.

வழியில் புகழ்பெற்ற மாரியம்மன் கோயில் சமயவேற்றுமையின்றி பலரும் வந்து பயபக்தியுடன் வழிபடுகின்ருர்கள் இலங்கையிலே பொதுமக்களுக்கு மத வேற்றுமையிடையாதென்பதற்கு இந்தக் கோயில் ஓர் அத்தாட்சி. அங்கு தினம் தினம் திருவிழாமாதிரித்தான். அதுவும் செவ்வாய். வெள்ளிக்கிழமைகளில் கூட்டம் தாங்காது. அங்கு ஒரு குருக்கள் அவசரப்படாமல் மிகசாவதானமாக சகஸ்ரநாம (ஆயிரத்தெட்டு) அர்ச்சனையை பக்தியுடன் செய்தது பலர் உள்ளத்தையும் தொட்டது.

ஒருநாளைக்கு பல சகஸ்ரநாம அர்ச்சனைகள் செய்ய பக்தர்கள் டிக்கெட் வாங்குகிருர்கள். ஒவ்வொரு அர்ச்சனையாகத் தனித்தனி செய்வதாயின், அவற்றையெல்லாம் முறையாகச் செய்ய ஒருநாளே போதாது ஆகவே அர்ச்சனை செய்ய வரும் பலரது பெயர் நட்சத்திரங்களைக் கேட்டு, புஷ்பத்தட்டை தொடச்செய்து எல்லோருக்குமாகச்சேர்த்து குருக்கள் நன்கு ஒரே அர்ச்சனையாகச் செய்கிருர். முடிவில் தீபாராதனை செய்து தனித்தனி பிரசாதமளிக்கின்றனர், எல்லோருக்கும் திருப்தியளிக்கின்றது.

0 0 0

ஒரு கோயிலில் குருக்கள் 'தேவாரம் அருளிப்பாடுக' என்றதும், ஒரு பெரியவர் மிக இனிமையான குரலில் தேவாரம் பாடினுர். என்ன தேவாரம் தெரியுமா? 'திருக்கோவிலில்லா திருவிலூரும்....... ஊரல்ல அடவிகாடே'' என்ற திருத்தாண்டகத்தைப் பாடியதும் சகிக்கமுடியவில்லை. ஒரு தெருவிலேயே பல கோயில்களும்

[illegible]

லிருந்த சின்னையாவாத்தியாரிடம் சொன்னுராம் ''இது சட்டி முடியாது. இறைவன் நிமித்தமாய்க் காட்டி இருக்கிருர். இல்லாவிட்டால் அந்தப் பெரியார் இந்தப் பாட்டைப் பாடி இருக்கமாட்டார்'' என்று: இந்தச் சம்பவத்தை நாவலர் பள்ளியில் படிப்பித்த சின்னையா வாத்தியார், தாம் மணுக்கராக இருக்கையில் தம்மிடம் தெரிவித்ததாக யாழ்ப்பாணம் சில்பாசார்ய ரேவதி சுப்புசாமி அவர்கள் எழுதுகிருர். அசந்தர்ப்பமான தேவாரங்களைப் பாடுவது எவ்வளவு தவறு. பஞ்சபுராணங்களில் என்னென்ன பாடுவதென்பதை முன்கூட்டியே நன்கு யோசித்து, தக்கனவற்றையே பாடவேண்டும். தக்க சம்பளம் கொடுத்து ஓதுவார் மூர்த்திகளை நியமித்து அவர்களைக்கொண்டு பாடவைத்தால். இவ்வித தவறுகள் வரா. பலர்மிகப் பொருத்தமான தேவார புராணங்களைப் பாடுகிருர்களதான் என்ருலும் ஒவ்வொரு முக்கிய கோயில்களிலும் ஓதுவா மூர்த்திகளை நியமித்து, இந்தப் பணியை செய்விப்பது. தேவார திருமுறைகளை வளர்ப்பதற்கும் உதவுவதுடன் குறைவில்லாது உயிர்கள் வாழவும், மேன்மைகொள் சைவநீதி விளங்கவும்உதவச்செய்யும்.

0 0 0

தமிழகத்திலே திருப்பனந்தாள் மடத்திலே யார்வந்து இரு தேவாரங்களை, அங்குள்ள ஆதீனத் தலைவர் முன் பாடினுலும் சரி, உடன் அவருக்கு 15 ரூபாய்களை ஆதீனத்தார் கொடுத்து வருகிருர்களாம். இன்றும் அப்படி நடக்கிறதென்று அங்கு நேரில் சென்று பார்த்த சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் தெரிவித்தார்கள். தேவார திருமுறைகளை அங்கு ஆதீனம் அப்படி ஆதரிக்கிறது இங்கு முக்கிய கோவில்களை நடத்துபவர்களாவது ஓதுவா மூர்த்திகளை நியமித்து தேவார திருமுறைகளை ஆதரிக்கமுடியாதா?

0 0 0

தம்பிரான் சுவாமி தமக்கு ஏற்பட்ட ஒரு நல்ல அனுபவத்தை ஒரு கூட்டத்தில் தெரிவித்தார். அவருக்கு வலது கண் பார்வை அடியோடு மங்கியிருந்ததாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொழும்பில் ஒரு மகாநாட்டைக் கூட்டுகிறார். கட்சி ரீதியில் அல்லாமல் தனிப் பட்டமுறையில் அவர் இந்த மகாநாட்டைக் கூட்டுகிறார். பலதரப்பட்ட துறையிலுமுள்ளவர்களுக்கு அவர் அழைப்பு அனுப்பியிருக்கிறார். அரசியலில் அனுபவமும் ஆற்றலுமுள்ளவர், சட்டத்துறையிலும் வல்லவர்.

கடந்தகால அனுபவங்களிலிருந்து புதிய அரசியல் அமைப்பில் தமிழ்மக்களின் உரிமைகளுக்கு எப்படியான பாதுகாப்பளிக்கப்படுமோ என்ற அச்சம் தமிழ்மக்கள் மத்தியில் நிலவுவது இயல்பே. தமிழ்மக்களைப் பொறுத்த அளவில் இன்றைய நிலை தெளிவற்றதாக, எதிர்காலம் பற்றி எதுவும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாத, நெருக்கடியான தாக உள்ளதென்று பலரும் கருதுகின்றனர். முன்னர்

## அதிகாரிக்கு பாராட்டுவிழா

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி நல்லூருக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஏ இராசையாவுக்கு ஊர்காவற்றுறையில் சேவை நலம் பாராட்டுவிழா ஒன்று நடைபெற்றது

பொலிஸ் அதிபரின் சமய பக்தியையும், கடமை உணர்ச்சியையும், சீரிய பணியையும் பாராட்டி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண பிதா ஸரனிஸ்லஸ் உட்பட பல பிரமுகர்கள் பேசினர் ஊர்காவற்றுறை நகர் பாதுகாப்புச் சங்கத்தின் ஆதரவில் இப்பாராட்டுவிழா நடைபெற்றது.

சுண்டிக்குழி மகளிர் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவ விருந்தாளிகளையெல்லாம் ஒருவர் வாழ்த்திப் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டது. என்ன அதிசயம்! என்னுடன் ஆரம்பத்தில் தமிழ் பற்றியும் அரசியல் பற்றியும் உரையாடிய செல்வன் சிவதெட்சணுமூர்த்தி தான் எழுந்தார்.

அவரது பேச்சிலே ஊடுபாவாக மிளிர்ந்த கிண்டல் கேலிகளையெல்லாம் என்னால் மறந்துவிடமுடியுமா?

'தி. மு. கவை நினைவூட்டும் பரிஜோவான் கல்லூரி' என்றார்.

'வேப்பமரங்களிலும் பார்க்க புளியமரங்கள் அதிகம் உண்டு. அகவே பாய்தல், ஒடுதல், போட்டியில் வேம்

தாவர உணவுதான், டாக்டரின்பேச்சையடுத்து 'வாழிய வாழிய இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திடஎங்கும்' என்றமாணவர்களின் இனிய பண்ணுடன் இரவு விருந்து நிறைவுபெற்றது.

இ. நாகராஜன்

ஆண்டாளாக அவதரித்தாள் என அவர்கள் நம்புகிறார்கள். 'திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழிய என வைணவர்கள் ஆழ்வார் பாடிப் போந்துள்ளார். ஆண்டாளின் அவதாரமகிமை சொல்லுந்தரமன்று. தனது அவதார

ஒடுங்கக் காண்பதுயோகியர் உள்ளம்''

என அழகுற வர்ணிக்கின்றது. பண்டை அரசர் பதினெட்டாம் பெருக்கைக் கொண்டாடியதை இலக்கியங்களும் கல்வெட்டுகளும் காட்டுகின்றன

ரும்......... ஊரல்ல அடவி காடே'' என்ற திருத்தாண்டகத்தைப் பாடியதும் சகிக்கமுடியவில்லை. ஒரு தெருவிலேயே பல கோயில்களும் கூட இருக்கும், ஓர் ஊரிலா இந்தத் தேவாரம் பாடுவது? பாடுவதற்கு வேறு தேவாரங்களாயில்லை? இவ்விதம் அசந்தாப்பமாக, பொருத்த மற்ற தேவாரங்களைப் பாட வேண்டாமென்று அப்பெரியவரை வேண்டிக்கொண்டேன்.

0 0 0

யாழ்ப்பாணத்திலே நாவலர் காலத்தில் ஒரு புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் இடுகையில் அங்கு வந்திருந்த நவலர் அவர்கள் ஒரு பெரியவரைத் தேவாரம், புராணம் பாடச்சொன்னார். அந்தப் பெரியவரும் ''வாழ்வாவது மாயம் இது மண்ணாவது, திண்ணம்'' என்ற தேவாரத்தைப் பாடினாராம்! இதைக்கேட்டதும் நாவலர் அவர்கள் பக்கத்தி

ஏற்பட்ட ஒரு நல்ல அனுபவத்தை ஒரு கூட்டத்தில் தெரிவித்தார். அவருக்கு வலது கண் பார்வை அடியோடு மங்கியிருந்ததாம். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம் கண் பார்வை வேண்டுமென்று திருவாரூரில் பாடிய ''மீளா அடிமை......'' என்ற பதிகத்தை தினசரி பூசையில் பாடிவரவே அது குணமாகிவிட்டதாயும், ஒரு கண் டாக்டரும் தாமாக வந்து மருந்து கொடுத்ததாயும் தெரிவித்தார்கள் நம்பினோர் நலமடைவர்.

0 0 0

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே, மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி, ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சென்னக்கால். வாளாங் கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்துபோதீரே.

— சுந்தரமூர்த்திசுவாமிகள்

# "தாழ்த்தப்பட்டவருக்கும் சைவ பரிபாலனத்தில் இடமளிக்கவும்"

## ராஜினுமாச் செய்த சபையின் துணைச்செயலாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

'சாதி வேற்றுமைக்கும் சைவத்திற்கும் தொடர்பே இல்லை. சைவ சமயம் வளர வேண்டுமாயின் சைவபரிபாலனத்தில் சைவர்கள் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்க நாம் முன்வருதல் வேண்டும்.'

மேற்கண்டவாறு சைவபரிபாலன சபையின் துணைக் காரியதரிசி, பரீட்சைக் காரியதரிசி, சைவ நூலக இயக்குநர் முதலிய பதவிகளிலிருந்து ராஜினுமாச் செய்துள்ள வித்துவான் சைவப் புலவர் க. கணபதிப்பிள்ளை ஓர் அறிக்கை மூலம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நாயன்மார்களும் சமயகுரவர்களும் தம் வாழ்விலும் வாக்கிலும் சைவத்திற்கும் சாதி வேற்றுமைக்கும் தொடர்பில்லை எனக் காட்டியுள்ளார்கள். பெரியபுராணத்தை அடிப்படை நூலாகக் கொள்ளும் சைவர்கள் யாவரும் சாதி வேற்றுமை பாராட்டுதலாகாதுஎன்றும் தமது இடத்திற்கு வேளாள வருணத்தைச் சேராத அதிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சைவர் ஒருவரைத் தெரிவு செய்து சைவபரிபாலனத்தில் எல்லாச் சைவர்களுக்கும் உரிமையுண்டு என்பதைக் காட்டுமாறும் அவர் சைவபரிபாலன சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாவலர் பெருமானே சாதிக்கும் சைவசமயத்திற்கும் தொடர்பில்லை எனத் தெளிவாகத் தெரிவித்திருந்தும் நாவலர் பெருமானைச் சிரமேற் போற்றும் நாம் சாதியடிப்படையில் சைவ சமய விஷயங்களை மேற்கொண்டமையே சைவத்தின் இன்றைய அவலநிலைக்குக் காரணம் எனவும் திரு. கணபதிப்பிள்ளை தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

'பெரியபுராணமும் அதிலே போற்றப்படும் நாயன்மார், சமயகுரவர் யாவரும் அக்காலத்துச் சாதி வேற்றுமையை ஒழிக்கவே வாழ்ந்தார்கள். சமயத்திலே உலகத்துச் சாதியைப் புகுத்துவது சைவத்திற்கு இழுக்காகும். ஆகையால் இனியாவது பரிபாலன விஷயங்களில் எல்லோர்க்கும் சம சந்தர்ப்பம் அளித்துச் சைவர்களிடையே சாதி வேற்றுமை இல்லை என்பதைச் செயலிலும் நாம் காட்டவேண்டும். இதுவே நாவலர் பெருமானையும் பெரியபுராணத்தையும் போற்றுவதற்கு இன்று நாம் செய்யும் முதற் பணியாகும்.

தாழ்த்தப்பட்ட குலத்திலே பிறந்த யாழ்ப்பாண நாயனுரைச் சமய குரவரும் பிராமணருமாகிய திருஞானசம்பந்தர் 'ஐயரே, ஐயரே' எனப் போற்றிய வழியை நாமும் பின்பற்றவேண்டும். திருக்குறிப்புத்தொண்ட நாயனுருக்கு திருத்தொண்டத் தொகையில் தான் 'அடியேன்' எனச் சுந்தரர் அன்று கூறினர். இன்று அக்குலத்தில் உதித்த ஒருவர் எவ்வளவு சிறந்த சிவபக்தராய் இருந்தாலும் அவரைப் போன்றுகின்றுரே மில்லை

சைவ சித்தாந்தத்திற்கும் உலகத்துச் சாதிக்கொள்கைக்கும் தொடர்பேயில்லை என நாவலர் பெருமானே கூறியுள்ளார். அவர் வாக்கை ஒவ்வொரு சைவனும் சைவ சபைகளும் பின்பற்ருவிடின் சைவத்தின் எதிர்காலம் இன்றைய நிலையிலும் மிக மோசமாகிவிடும்

இக்கருத்து இன்று சில சைவப் பெரியார்களுக்குப் பொருத்தமற்றதாகக் காணப்படலாம். அதற்குக் காரணம் நாயன்மார் வரலாறும் பெரியபுராணமும் சாதி வேற்றுமையை நிலைநாட்டவே ஏற்பட்டவை என்னும் தவருன எண்ணத்தின் விளைவே சாதி வேற்றுமையை நீக்கிச் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் எல்லாச் சைவர்க்கும் அளிப்பதே பெரிய புராணத்தினதும் நாயன்மார்களதும் குறிக்கோளாகும்."

## முதற் பெண்



அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் வாய்ப்பாட்டில் 'சங்கீத பூஷணம்' டிப்ளோமா பட்டம் பெற்றுத் திரும்பியிருக்கிறார் செல்வி நீற்ருஞானதீபம், இவர் யாழ்ப்பாணம் டேவிற்வீதியைச்சேர்ந்த திரு. ஜே. செபஸ்தியாம்பிள்ளை திருமதி எம். பி. செபஸ்தியாம்பிள்ளை (ஆசிரியை) தம்பதிகளின் புதல்வியாவார்.

கிறிஸ்தவ சமயத்தில் வாய்ப்பாட்டில் 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமைக்குரிய 22 வயதான செல்வி நீற்ரு யாழ். சென் மெரிஸ் கல்லூரியின் மழைய மணவியாவர்.

# கட்சி அரசியலுக்கு எதிராக 'தஹா' போராடுவார்!

கோட்டை, செவ்வாய்

கட்சி அரசியல் முறைக்கு எதிராகப் போராட டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா திட்டமிட்டுள்ளார்.

யு. என். பி யிலிருந்து விடைபெற்றுக்கொண்ட தஹா நாட்டுக்கு கட்சி அரசியல் நச்சுத்தன்மை போன்று அழிவைத் தேடித் தரக்கூடியதென்று கூறுகிறார். பழைய கமிட்டி முறை ஒழிக்கப்பட்டு மந்திரிசபை அமைப்பு முறை ஏற்படுவதற்குத்தான் ஒருவனே வாக்களித்ததை நேற்று அவர் நினைவு படுத்தினர்.

லங்கா பிரஜாவாத கட்சியை கலைத்துவிட்டு சில மாதங்களுக்கு முன்னர்தான் யு. என். பி. யில் தஹா சேர்ந்தார். கடந்த தேர்தலிலும் யு. என். பி. யில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்.

கட்சி அரசியல் முறையை ஒழித்துக்கட்ட பிரச்சாரம் செய்ய தஹா திட்டமிட்டுள்ளார்.

## 3வது தடவையாக உபதலைவர்

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவு கிராமசபையின் உபதலைவராக திரு. பெ. கார்த்திகேசு மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

உபதலைவராக இவர் ஏகமனதாகதெரிவு செய்யப்பட்டது இது 3வது தடவையாகும்.

கோட்டை, செவ்.

சிறைக்கமிஷனர் திரு. பீலிக்ஸ் ரத்னுயக்கா கட்டாய லீவில் அனுப்பப்பட்டார். திரு. ஏ. ஏ. டி. சில்வா பதில் சிறைக் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## சுன்னுகம் மயான கொலை வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

சுன்னுகம் மயான கொலை வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் இம்மாதம் 20-ந் திகதி விசாரணை செய்யப்படவிருக்கிறது.

இவ்வழக்கு நேற்று நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் விசாரணையை 20-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தவறிவிட்டது

சுன்னுகம் கருவாட்டுக் கடையடியில் ரசீதுகள், ஒப்பந்தப்பத்திரங்கள், பிரதானமான கடிதங்கள் அடங்கிய புற்பை ஒன்று 4-8-70-ந் திகதி 10 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ரூபா 50/- சன்மானம் வழங்கப்படும்.

3040

ஆசிரியருக்குக்கடிதம்

# சுயநிர்ணய உரிமை தனியாகவா? கூட்டாகவா?

இலங்கையில் சிங்களவர், தமிழர் ஆகிய இரு இனத்தவர்கள் மட்டுமே இருந்தார்கள் என்பதை இலங்கையைக் கைப்பற்றியாண்ட போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படவேண்டுமானல் இரு இனத்தவர்களிடையேயும் வருங்காலத்தில் ஒற்றுமையை நிலைநாட்டவேண்டும். இப்பிரச்னையை மகாராணியுடன் கலந்தாலோசித்தால் அவர் ஒற்றுமையை நிலைநாட்டுவது குறித்துப் புதிய வழிவகைகளையே கையாளுவார் என நான் நினைக்கிறேன். புதிய முறையைக் கையாளவேண்டுமென்பதை ஜெனிங்ஸின் பொதுநல அமைப்பின் அரசியல் அமைப்பு சட்டங்கள் என்ற நூலில் தெளிவாகக்காணலாம். ''29-வது சரத்தை நோக்குமிடத்து இலங்கை ஆட்சிமன்றம் சுதந்திரமானது எனக் கூறவியலாது...'' எனக் குறிப்பிட்டுள்ளார்

எனவே இதிலிருந்து இரு இனத்தவர்கள் மத்தியில் ஒற்றுமையை நிலைநாட்டுவது குறித்துப் புதிதாக ஆராயப்படவேண்டும். தற்போதைய அரசியல் திட்டத்தை உருவாக்கிய சோல்பரி, ஜெனிங்ஸ் ஆகிய இருவருமே தங்கள் அரசியல் திட்டத்தில் நாங்கள் விட்டதவறை அதாவது சிறுபான்மையினருக்கு போதிய பாதுகாப்பின்மையை சுட்டிக்காட்டியுள்ளனர்.

முஸ்லிம்களும் இந்துக்களும் ஒரு பொது அரசியல் திட்டத்தை முன்பு ஏற்றுக்கொள்ள மறுத்தபோது பிரித்தானியர் முஸ்லிம்களுக்கு ஒரு தனியரசை உருவாக்கிக்கொடுத்தனர். அக்காலத்தில் அந்த அரசு எந்த அமைப்பிலும் உருவாகவில்லை. இந்த முஸ்லிம்களிலும் பார்க்க தமிழர்கள் தமக்கென ஒரு தனி அரசு கோருவதில் கூடிய நியாயம் இருக்கிறது என நான் கருதுகிறேன். தமிழர்களுக்கு ஏற்கனவே இருமாகாணங்கள் உள்ளன.

தற்போது முயற்சிப்பது போன்று அரசியல் அமைப்பின்றி இலங்கை பிரிந்து நிற்கவிருப்பினுல், சிங்கள மக்களுக்கு தாங்கள் ஒன்று சேர்ந்து அரசியல்அமைப்பை மாற்றவோ அல்லது புரட்சி செய்யவோ அதிகாரம்வழங்காத தமிழ்மக்கள் ஒரு அரசியல் திட்டத்தைதங்களுக்கு உருவாக்கி தமக்கென ஒரு புரட்சி தமிழ் அரசை உருவாக்கச் சுதந்திரமுடையவர்கள் அல்லது மகாராணியின் உத்தரவோடுஒரு சட்ட அரசியல் அமைப்புடைய தமிழ்அரசைக்கூட உருவாக்கலாம். இது வழங்கப்படலாம் எனநான் நினைக்கிறேன். ஏனெனில் தமிழர் சிங்களவர் ஆகிய இருவரும் இந்நாட்டின் தலையாய இரு இனத்தவர்கள், அவர்கள் தங்கள் சுதந்திரத்தையும் தனித்தன்மையையும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோரிடம் இழந்தவர்கள் ஆவர்.

எனவே அரசியல் திட்ட அமைப்பின் கீழோ அல்லது அரசியல் திட்ட அமைப்பின்றியோ ஒரு அரசாங்கத்தை அமைக்க தமிழ் மக்கள் கட்டாயம் உடன்பட வேண்டும் எனக்கூறுவதற்கு சிங்கள மக்களுக்கு எதுவித மான உரிமையும் இல்லை. அவர்கள்விரும்பிஒத்துழைத்தால் ஏற்றுக்கொள்ளலாம் இதற்கு சிங்களமக்கள் இந்தியா, ரஷ்யா, சீனு, அரபு நாடுகளோடு பேச்சுவார்த்தை நடாத்துவது போல் தமிழர்களையும்தனித்துவம் வாய்ந்த ஒரு பகுதியினராகக் கருதிப்பேச்சுவார்த்தை நடாத்தவேண்டும்.

இவ்வாறு பல உண்மைகளையெடுத்து ஆராயும்போது இந்திய யூனியன் அரசமைப்புப் போன்றதொன்றே இலங்கைக்கு மிகப்பொருத்தானதாகும் என்பது தெளிவாகிறது. தமிழ்மக்களின் அதிகாரத்தையும் உடன்பாட்டையும் பெற்றே இத்தகைய ஒரு அரசியல் அமைப்பு உருவாக வேண்டும்.

ஜே. ஆர். சின்னத்தம்பி,
புல்லர்ஸ் வீதி, கொழும்பு.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org